Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்—2 மதுரை

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம். பிலவ மாசி 13 ஆம நாள ரம்ழான் 18 (24 2-62) சனிக்கிழமை இதழ் 14

# ‘சேர் ஒலிவரைப் பதவி

## நீக்கம் செய்ய வேண்டும்

## 48 மணி நேரம்கூட ராணி மாளிகையில் வைக்கக்கூடாது

### சதிவிவகாரத்தில் இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டுள்ளார்’

### பார்லிமெண்டில் பிலிப் குற்றச்சாட்டு

கொழும்பு, வெள்ளி

அரசாங்கத்தைக் கவிழ்க்க நடைபெற்று தோல்வியில் முடிவடைந்த சதிநடவடிக்கைகளில் கவர்னர் ஜெனரல் சேர். ஒலிவர் குணத்திலக்கா இப்பொழுது மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். ராணி மாளிகையில் இன்னும் 48 மணி நேரத்துக்குக்கூட அவர் இருப்பதற்கு அனுமதிக்கக் கூடாது. சேர். ஒலிவரை கவர்னர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு பின்னர் அரசாங்கம் மகாராணிக்கு அறிவிக்கலாம். இது சுதந்திர நாடு. இவ்விதம் செய்வதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. இதற்கு அரசியல் திட்டம் இடம் கொடுக்கவில்லையானல் அரசியல் திட்டம் கிழிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு எம். ஈ. பி. தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன இன்று பார்லிமெண்டில் கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதா கமிட்டி நிலையில் பரிசீலனை செய்யப்பட்டபோது பேசுகையில் கூறினர்.

ஜனப்பிரதிநிதிகள்சபை, சபாநாயகர் ஆர். எஸ். பெல்பொல தலைமையில் இன்று இன்று காலை மீண்டும் கூடிய பொழுது சபை கமிட்டி நிலையில் மாறி கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதாவை தொடர்ந்து ஷரத்துவாரியாகப் பரிசீலனை செய்தது.

இன்றைய விவாதத்தின் போது திரு. பிலிப் குணவர்த்தன பேசுகையில் பின்வருமாறு கூறினர்.

**நிதி மந்திரிக்கு பூரண ஆதரவு**

அரசாங்கத்துக்கும் பிற்போக்கு வாதிகளுக்குமிடையில் ஒரு உள்நாட்டு யுத்தம் என்ற நிலையில் இன்று நாட்டின் நிலைமை உள்ளது. பிற்போக்கு வாதிகளான சதிகாரர்களை எதிர்த்துப் போராடுவதற்கு நிதி மந்திரிக்கு பூரண ஆதரவு கொடுக்கப்படவேண்டும். அவர் ராணி மாளிகையிலிருந்து உதவியோ ஆதரவோ பெறவில்லை.

கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணத்திலக்கா ராணிமாளிகையில் இன்னும் பதினைந்து நாட்களுக்கு இருக்கக்கூட அனுமதிக்ககூடாது. சேர் ஒலிவரை பதவியிலிருந்து நீக்கிவிட்டு மகாராணிக்கு அரசாங்கம் அறிவிக்கவேண்டும். இவ்விதம் செய்வதற்கு அரசாங்கத்துக்கு பூரண அதிகாரம் உண்டு.

**ராணிமாளிகை காரணம்**

நாட்டில் லஞ்சம், ஊழல்களுக்கு ராணிமாளிகை முக்கிய தளம். ஜனவரி 27-ந் திகதி கூட சேர் ஒலிவர் திரு. முக்தார் வீட்டிலிருந்தாரென்று நான் அறிகிறேன். குதிரை மீது கட்டிய பந்தயச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது சதிகாரர்களை கடைசியாகச் சந்திப்பதற்கு அவர் அங்கு சென்றிருக்கக்கூடும்.

பார்லிமெண்ட்

## மார்ச் முதல் திகதி மீண்டும கூடும்.

கொழும்பு, வெள்ளி

கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதா நேற்று நள்ளிரவுக்குப் பின்னரும் பார்லிமெண்டில் கமிட்டி நிலையில் பரிசிலனை செய்யப்பட்ட பின் இன்று காலையிலிருந்து மாலை வரை தொடர்ந்து பரிசீலனை செய்யப்பட்டது. சபை மார்ச் மாதம் முதல் திகதி காலை 10 மணி வரை ஒத்திவைக்கப் பட்டது.

—

## நேரு-பவல்ஸ் சந்திப்பு

புதுடில்லி, பெப். 23

அமெரிக்க ஜனதிபதி கென்னடியின் வெளிவிவகார ஆலோசகர் திரு. செஸ்டர் பவல்ஸ் இன்று பிரதமர் நேருவைச் சந்தித்தார்.

—

## அல்ஜீரியாவில் 23 பேர் பலி

அல்ஜிரியர்ஸ், பெப். 23

அல்ஜீரியர்ஸில் ஏற்பட்ட ஒரு கலகத்தில் நேற்று 23 பேர் கொல்லப்பட்டனர்.

—

## ரயில் விபத்தில் 28 பேர் பலி

லண்டன், பெப். 23

கொலம்பியாவில் ஏற்பட்ட ஒரு ரயில்விபத்தில் 28 பேர் கொல்லப்பட்டனர். 50பேருக்கு காயம் ஏற்பட்டது.

பண்டாரநாயக்கா கொலை வழக்கு

## முடிக்குரிய வழக்கறிஞருக்கு சுகவீனம்

### இன்னும் லண்டன் செல்லவில்லை

கொழும்பு, வெள்ளி

பிரிவிக் கவுன்சிலுக்கு பண்டாரநாயக்கா கொலை வழக்கு அப்பீல் சம்பந்தமாக லண்டன் செல்லவிருந்த முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எல். பி. டி. பிரேமரத்ன சுகவீனமாய் ஆஸ்பத்திரியில் இருக்கிறுர். அவருக்குப் பதிலாக வேறு எவரும் இது சம்பந்தமாக குறிப்பிடப்படவில்லை. அவசியமானல் புதிய நியமனம்பற்றி நீதி அமைச்சு முடிவுசெய்யும்.

—

## கலைப்புலவர் மறைவு; 2 பாடசாலைகள்மூடப்பட்டன

யாழ்ப்பாணம், சனி

கலைப்புலவர் க. நவரத்தினத்தின் மறைவுக்காக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும், வைத்தீஸ்வர வித்தியா சாலையும் நேற்று மூடப்பட்டன. இப் பாடசாலைகளின் மாணவர்கள் மாலை அவரது இறுதிச் சடங்கில் கலந்து கலந்து கொண்டனர்.

—

## மணிபாகவதர் மலாயா செல்வார்

தெல்லிப்பழை, வெள்ளி

முத்தமிழ் மணி வண்ணை வி. எஸ். மணி பாகவதர் இரண்டாவது தடவையாக வருகின்ற பத்தாம் திகதியளவில் மலாயாவுக்குப் பிரயாணமாகவிருக்கின்ருர்.

## “நீதிபதிகள் சுதந்திரமாக செயலாற்ற முடியுமா?”

—திரு. டட்லி

## “விருப்பம்போல் தீர்ப்பைப் பெற அரசாங்கம் விரும்புகிறது”

—கோப்பாய் எம். பி.

கொழும்பு, வெள்ளி

“வி. வி. திஸ்ஸநாயக்காவின் அறிக்கை உண்மையானல் அது மந்திரிசபையிலுள்ள சக்தி வாய்ந்த ஒருவருக்கு எதிராகத் தொகுக்கப்பட்ட ஒரு குற்றச்சாட்டாகும். அப்படியானல் மந்திரிமார்கள் நீதிபதிகளை நியமிப்பது நியாயமாகுமா?” என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா கேட்டார்.

தீர்ப்பு தங்கள் பக்கம் இருக்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்புவதாலேயே தங்களுடைய ஆட்களை நீதிபதிகளாக நியமிக்க அரசாங்கம் விரும்புகிறது என்று கோப்பாய் எம். பி. பாலசுந்தரம் கூறினர்.

கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதா பார்லிமெண்டில் இன்று கமிட்டி நிலையில் தொடர்ந்து பரிசீலனை செய்யப்பட்ட போது எதிர்க் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா பேசுகையில் சதித்திட்டம் பற்றி விசாரணை செய்வதற்காக நியமிக்கபப்படவிருக்கும் நீதிமன்றத்தில் பணியாற்றும் நீதிபதிசளை நீதியரசர் தெரிவு செய்ய வேண்டும் என்று மசோதாவிலுள்ள ஷரத்தைக் கண்டித்தார். திரு. டட்லி சேனநாயக்கா கூறியதாவது:

சுப்ரீம் கோர்ட்டுக்கு பிரதமரின் சிபார்சின் மீது கவர்னர் ஜெனல் நீதியரசர்களை நியமிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்று

காலை 6-30 மணிக்கு சுன்னுகம் திவ்விய ஜீவன சங்கத்தில் யோகிராஜ் சச்சிதானந்தரின் ஆசனப் பயிற்சி. மாலை 4-30க்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆசனப் பயிற்சி. மாலை 6-30க்கு சொற்பொழிவு.

## “சுட்டுக் கொல்ல கோரும் மசோதாவானல் ஆதரிப்பேன்

### இந்த மசோதா நீதியை அழிக்கிறது”

—நல்லூர் எம். பி.

கொழும்பு, வெள்ளி

“சதியில் சம்பந்தப்பட்டதாகக் கைது செய்யப்பட்டுள்ள 29 பேர்களையும் சுட்டுக்கொல்ல வேண்டும் என்று மசோதா கொண்டுவரப் பட்டிருந்தால் நான் அதை ஆதரித்து வாக்களிப்பேன். நீதியைக் குலைக்கும் இந்த மசோதாவை ஆதரிக்க மாட்டேன்” என்று நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் இன்று பார்லிமெண்டில் கூறினர்.

கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதா ஜனப்பிரதிநிதிகள் சபையில் கமிட்டி நிலையில் இன்று தொடர்ந்து பரிசீலனை செய்யப்பட்டபோது நடைபெற்ற விவாதத்தில் டாக்டர் நாகநாதன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

நிதிமந்திரி பார்லிமெண்டில் சமர்ப்பித்த அறிக்கையின்படி சதிவிசாரணையில் நீத மந்திரி சாட்சிகளை விசாரணை செய்திருக்கிறுர்; குறுக்குவிசாரணையும் செய்திருக்கிறுர். விசாரணையில் பூரணமாக அவர் பங்குபற்றியிருக்கிறுர். இப்பொழுது அவரே (நீதிமந்திரி) தயாரித்த வழக்கை விசாரணை செய்வதற்கு அவரே நீதிபதிகளை நியமிக்கவிருக்கிறுர். எனவே தனது சொந்த வழக்கில் நீதிமந்திரியே வழக்கா

(8ம் பக்கம் பார்க்க)

# டாக்ஸிகளில்சாரதியின் புகைப் படம் ஒட்டப்படவேண்டும்

## மோட்டார் போக்குவரத்து இலாகா நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

டாக்ஸி சாரதிகள், இனிமேல் அவர்களது புகைப்படங்களை காருக்குள் ஒட்டும்படி கேட்கப்படுவார்கள். பொலிஸ் பகுதியின் மோட்டார் போக்குவரத்துக் கிளை அதிகாரி இது பற்றித் தெரிவிக்கையில், டாக்ஸி சாரதிகளினால் இம்சிக்கப்படுபவர்கள்தொகை அதிகரித்துக்கொண்டு வருகிறதென்றும், அப்படிப் பட்டவர்கள் டாக்ஸி சாரதிகளை அடையாளம் கண்டுகொள்வதற்கு சாரதிகளின் புகைப்படம் காருக்குள்ளிருந்தால் சுலபமாயிருக்குமென்று கூறினர்.

டாக்ஸி சாரதிகளினால் இம்சிக்கப்பட்டவர்கள் அதிகமானோர், அடையாளம் கண்டுகொள்வதில்அதிகசிரமம் ஏற்படுவதாயும் இதனால் குறிக்கப்பட்ட சாரதிகளின்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறது என்றும் அவர் கூறினர்.

---

## கடிதங்களை விநியோகிக்க தவறினர்

### தபால் சேவகருக்கு சிறைத்தண்டனை

பருத்தித்துறை, வெள்ளி

1960-ம் ஆண்டு நவம்பர்மாதம் 7-ம், 9-ம், 11-ம் தேதிகளில் வந்த பதிவுக்கடிதங்கள் மூன்றை விநியோகிப்பதில் காலங் கடத்தியதாக வல்வை தபால் நிலைய சேவகர் அ. கிருஷ்ண கோபால் மீது குற்றம் சாட்டித்தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வயித்திலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி எதிரிக்கு 2மாதக் கடூழியச் சிறைத்தண்டனைவிதித்து தீர்ப்பு வழங்கினர்.

---

## மட்டக்களப்பிலும் அம்மை நோய்!

### தடுப்பு இயக்க வேலைகள் ஜரூர்

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்புப் பகுதியிலும் ஒரு சிலருக்கு அம்மை இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சில பாடசாலை விடுதிகளில் உள்ள மாணவ மாணவிகளுள், அம்மை நோய் ஏற்படலாமென சந்தேகிக்கப்பட்டவர்கள் சிலர் ஏற்கனவே வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். சுகாதாரப் பகுதியினர் தடுப்பு இயக்க வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். சகல பாடசாலைகளிலும் அம்மைப்பால் குத்தப்பட்டு வருகிறது.

---


### விற்பனைக்கு

"அல்சியன்" நாய்க்குட்டிகள் விற்பனைக்கு கொடுக்கப்படும். தேவையானோர் நேரில் பார்வையிடலாம்.

எஸ். பசுபதி, 5, சிறும்பியடி, யாழ்ப்பாணம்.


---


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்


---

# உங்கள் தினப்பலன்

சோதிடஆசான் செ. தெல்லியூர்

பிலவ ஆண்டு மாசிமாதம்13ந் தேதி சனிக்கிழமை (24-2-62) இரவு 4-06வரை பஞ்சமி.மாலை 4. 34வரை சித்திரை. பின் சுவாதி. மரணயோகம் புதியன எதிலும் பிரவேசிக்கக்கூடாது. தெய்வவழிபாடுஉகந்தது.வியாழபகவான் இன்று பின் இரவு மகரத்திலிருந்து கும்பத்திற்குச் செல்லுகின்ருர்.

### இன்றுபிறந்தவர்களுக்கு

இன்று பிறந்தவர்களுக்கு நீண்டதூரப் பிரயாணங்கள், கஷ்டசம்பவங்கள் இடையிடை நடத்தல், ஆடம்பரச்செலவுகள் அதிகரித்தல், உத்தியோகத்தில் மந்தமான பலன்கள் நடத்தல், கமத்தொழில் முயற்சித் தடைகள் ஆதியன காணப்படுகின்றன. கல்விகற்போருக்கும், பெண்களுக்கும் நற்பலன் நடக்க இடமுண்டு. பெண்களை தீப்பலன்கள் அதிகம்தாக்க இடமில்லை. வருங்காலம் வெகு விசேடமாக இருக்கும்.

### நட்சத்திரப்பலன்

அச்சுவினி: உடல் நலக்குறைவு, தொழிற்தடை.

பரணி: குடும்பசுகம், சந்தோஷம்.

கார்த்திகை: இனசனக் கொண்டாட்டம், செலவு.

ரோகிணி: கல்விமேன்மை, புத்திசாதுரியம்.

மிருகசீரிடம்: கடும்உழைப்பு, பணமுடை.

திருவாதிரை: பெரியோர் உதவி, நலம்.

புனர்பூசம்: ஊழியர் ஆதரவு, நிம்மதி.

பூசம்: பணியாளர் தொல்லை, கடன்படல்.

ஆயிலியம்: பெரியோர் ஆதரவு, அனுகூலம்.

மகம்: உறவினர்பகை, சஞ்சலம்.

பூரம்: முதியோர்நட்பு, மதிப் புணர்ச்சி.

உத்தரம்: தொழிற்கேடு,பணமுடை.

அத்தம்: நல்லோர் நட்பு, தொழில் வெற்றி.

சித்திரை: முதியோர் எதிர்ப்பு, மனக்கவலை.

சுவாதி: தொழில் மேன்மை, பணவரவு.

விசாகம்: கடன்வரவு, சொற்றிறம்பாமை.

அனுஷம்: உறவினர் பகை, பணமுடை.

கேட்டை: பிரயாணசுகம், சந்தோஷம்.

மூலம்: மனக்கவலை, காரியக் கேடு.

பூராடம்: உறவினர் உதவி தொழில்மேன்மை.

உத்தராடம்: உழைப்புக் கடுமை, பலிதக்குறைவு, கடன்.

திருவோணம்: தொழில் நன்மை, பணவரவு.

அவிட்டம்: செலவு அதிகரிப்பு, கடன்படல்.

சதயம்: சுபசெய்தி, பணவரவு.

பூரட்டாதி: குடும்ப சந்தோஷம், சுபகரும முயற்சி.

உத்தரட்டாதி: கடும்உழைப்பு, பணமுடை.

ரேவதி: தொழில் மேன்மை, நிம்மதி

---

புதுடில்லி, பெப் 23

ஜனதிபதி கென்னடியின் வெளிநாட்டு விவகார ஆலோசகர்களில் ஒருவரான திரு. செஸ்டர் பவுல்ஸ் நேற்று புதுடில்லி வந்திருக்கிருர். இந்தியாவில் அவர் 5 நாட்களுக்குத் தங்குவார்.

## உரும்பராயில் சிவராத்திரி விழா

உரும்பராய், வெள்ளி

இம்மாதம் 4ந்திகதி சிவராத்திரியை இறுதியாகக்கொண்டு முதற்பத்து நாட்களில் உரும்பராய் ஞானவைரவ கோயிலில் ஸ்நபன,ருத்திர கும்பாபிஷேகமும், சிவராத்திரி அன்றுபகல் அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும், இரவு நான்கு சாமத்தும் விசேட அபிஷேக ஆராதனை, அர்ச்சனைகளும், முடிவில் தீர்த்தோற்சவமும் நடைபெறும். அன்று இரவு சங்கீத கதாப்பிரசங்கமும், சமயசம்பந்தமானஉபந்நியாசங்களும்,கூட்டுப்பிரார்த்தனைகளும் புராண படனமும் நடைபெறும்.

---

## பர்மா ஜனதிபதிக்கு வருமான வரி

ரங்கூன், பெப். 23

பர்மாஜனதிபதியின்சம்பளத்துக்குவருமானவரிவிதிக்க வழி செய்யும்மசோத பிரதிகள்சபையில் நிறைவேறியது. ஜனதிபதியின் மாதச்சம்பளம் ரூ. 5000. ஜனதிபதியின் படியும் குறைக்கப்படும். வருஷாந்தர விருந்தோம்பல் படி ரூ 25,000-மும் சுற்றுப்பிரயாணப் படி ரூ. 60, 000-மும் மாறவில்லை.

## தாய்லாந்து செல்லும் மட்டுநகர் வீரர்

மட்டக்களப்பு, வெள்ளி

சமீபத்தில்தாய்லாந்து செல்லவிருக்கும் இலங்கைஉதைபந்தாட்டச் கோஷ்டியில் மட்டக்களப்பிலிருந்து திரு. கே. மாணிக்க வாசகரும் ஒருவராகத்தெரிவு செய்யப்பட்டுள்ளார். மட்டுநகரில் உதைபந்தாட்டத் துறையில் முன்னணியில் திகழும் திரு. கே. மாணிக்கவாசகர், மட்டக்களப்பில் பிரபல்யம் வாய்ந்த "டைனமோஸ்" விளையாட்டுக்கழகத்தைச்சேர்ந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

---

## மாதர் சங்கத்துக்கு நன் கொடை

தெல்லிப்பழை, வெள்ளி

வலிகாமம் வடக்குக்காரியாதிகாரியால் சுன்னுகம் மாதர் விருத்திச்சங்கத்திற்கு ரூபா 200 நன் கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இப்பணம் இச் சங்கத்தினர் நடத்தும் தையல் வகுப்புக்கு வேண்டிய உபகரணங்கள் வாங்க உபயோகப்படுத்தப்படும்.

சங்க உறுப்பினர்களுக்கு இம் மாதம் விநியோகிப்பதற்கென 50 கோழிக் குஞ்சுகளும் வழங்கப்பட்டுள்ளன.

## காதல் ஜோடி பிடிபட்டது

ஹொரணை, வெள்ளி

"பெற்றேருடன் போவதற்கு நான் விரும்பவில்லை. நான் எனது காதலனுடனேயே செல்லவிரும்புகின்றேன்." என்று ஹொரணை சர்க்கியூட் மாஜிஸ்டிரேட் திரு. டி.எஸ். சாலி முன்னிலையில் 16 வயதுள்ள ஒரு பெண் கூறினர்.

பெற்றேரின் பாதுகாப்பில் இருந்த ஒரு பெண்ணை, கடத்திச் சென்றதாக ஒரு இளைஞன் மீது குற்றம் சாட்டப்பட்டு, அங்குறுவதோட்ட பொலிஸார், ஹொரணை சர்க்கியூட் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஒரு இளம் 'காதல் ஜோடி'யை கொண்டுவந்திருந்தனர். கோர்ட்டில், மாஜிஸ்டிரேட் அப்பெண்ணைப் பார்த்து பெற்றேருடன் போகும்படி கூறிய சமயம் அவர் மேற்கண்டவாறு கூறினர்.

இளைஞனை பிணையில் விடுதலை செய்து மாஜிஸ்டிரேட் வழக்கை தள்ளுபடிசெய்தார்.

---

புதுடில்லி, பெப் 23

பண்டித மதன்மோகன் மாளவியாவின் 100-து பிறந்தினம் நேற்று பலவிடங்களில் கொண்டாடப்பட்டது. உயர்கல்விக்கு அவர் செய்துள்ள சேவை பற்றி பம்பாயில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் புகழ்ந்துரைக்கப்பட்டது


# தாயும் மகளும் நவ நாகரீகமாகத் திகழ

## உகந்தது ஜம்பிங் பிஷ்

### பிரிண்டட் பேப்ரிக்

தாயும் மகளும் நவநாகரீகமாக உடுத்துவதற்கு இந்தப் புதிய பேப்ரிக்குகளை நிச்சயம் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள். இந்த அச்சடி கேம்பிரிக்குகள் பிரகாசமானவை, கனமில்லாதவை, நீடிய காலம் உழைப்பவை. குறைந்த விலையில் கிடைப்பவை. பல கலர்களிலும், பல்வேறு டிசைன்களிலும் கிடைப்பவை. இன்றே ஜம்பிங் பிஷ் பேப்ரிக்குகளில் நீங்களும் தைத்து உடுத்துங்கள் —இது சிக்கன வாழ்விற்கு ஸி. டப்ளியூ. ஈ. அளிக்கும் அன்பளிப்பு



ஏக விநியோகஸ்தர்கள்:

ஸி. டப்ளியூ ஈ

கிடைக்குமிடங்கள்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா, ஸ்டோர், கோட்டை, கொழும்பு மக்கலம் ரோட், மெயின்வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும்- CWE ஸி. டப்ளியூ- ஈ, தரத்திலும் ரகத்திலும் உயர்ந்த பொருட்களையே உங்களுக்கு அளிக்கின்றது

# துருக்கி அரசாங்கத்தை கவிழ்க்க படை

## அதிகாரிகள் முயற்சி

### சதித்திட்டம் முறியடிக்கப் பட்டதாக அறிவிப்பு

அங்காரா, பெப். 23

**துருக்கியில் விமானப் படையைச் சேர்ந்த இளம் அதிகாரிகள் சிலரும், ராணுவ அதிகாரிகளும் சேர்ந்து அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாயும், சதி முயற்சி முறியடிக்கப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.**

ஆயினும் சதிபற்றிய சரியான விபரம் தெரியவில்லை. அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் முன்னுக்குப்பின் முரணாயிருக்கின்றன. இதுவரை 60 அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருப்பதாயும், அரசாங்கத்துக்கு விஸ்வாசமான துருப்புக்கள் பொது இடங்களைக் காவல் புரிவதாயும் கூறப்படுகிறது.

புரட்சிக்காரர்கள் அங்காரா ரேடியோ நிலையத்தைக் கைப்பற்றி பிரதம மந்திரி நிகழ்த்தவிருந்த ஒலிபரப்பைத் தடுத்துவிட்டதாயும் மற்றோர் செய்தி கூறியது.

**கடைசிச் செய்தி**

ராணுவக் கிளர்ச்சி இப்போது அடக்கப்பட்டுவிட்டதாயும், பிரதமர் ஜெனரல் இஸ்மத் இனனுவின் கட்டுப்பாட்டில் இப்போது நிலைமை இருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டது. ஒரு ஜெனரல் உட்பட 75 அதிகாரிகள் இப்போது கைதாகியிருக்கின்றனர்.

### நேப்பாளத்தில் துப்பாக்கிச் சண்டை

காட்மாண்டு, பெப். 23

மேற்கு நேப்பாளத்தில் பொலிசாருக்கும் ஆயுதம் தாங்கிய கலகக்காரர்களுக்குமிடையே 4 மணி நேரம் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாயும், 100 ஆயுதப் பொலிசார் தாக்கியதன் காரணமாக கலகக்காரர்கள் பின்வாங்கிவிட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

### மீண்டும் காஷ்மீர் விவாதம்?

நியூயோர்க், பெப். 23

காஷ்மீர் சம்பந்தமாக மார்ச் மாத மத்தியில் பாதுகாப்பு சபை கூடி விவாதிக்க வேண்டுமென பாகிஸ்தான் கோரியுள்ளதாய் அறிவிக்கப்படுகிறது.

### மார்ச் 1-ல் பாக். அரசியல் சாஸனம்

கராச்சி, பெப் 23

பாகிஸ்தானின் புதிய அரசியல் சாஸனம், மார்ச் 1-ம் தேதி பிரகடனப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாகிஸ்தானின் முன்னைய அரசியல் சட்டம் 1958-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் திகதி ரத்தானது. பாகிஸ்தானை ஒரு இஸ்லாமியக் குடியரசாக முன்னைய அரசியல் சட்டம் அறிவித்திருந்தது.

### அந்த ஒளி என்னவாய் இருக்கும்?

கேப்கனவரோல், பெப். 23

அமெரிக்க வானவெளிப் பிரயாணி ஜோன் கிளன் பூமிக்கு மேலே 125 மைல் தூரத்தில் சென்றபோது தென்பட்ட ஒளி என்னவாய் இருக்கலாம் என்பதுபற்றி விஞ்ஞானிகள் இப்போது தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.



புதிதாக நிறுவப்பட்ட ஆயுதக் கட்டுப்பாடு, ஆயுத பரிகரண ஏஜென்ஸிக்குத் தலைவராக நியமிக்கப்பட்ட வில்லியம்ஸி· போஸ்டருடன் ஜனாதிபதி கென்னடி பேசிக்கொண்டிருக்கிறார். திரு போஸ்டர் அமெரிக்கவெளிநாட்டு உதவித் திட்டத்தின் முன்னாள் அதிபராகும்.

# திரைப்பட இறக்குமதி தடையை நீக்குக

## பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு வேண்டுகோள்

கராச்சி, பெப். 23

இந்தியத் திரைப்படங்களின் இறக்குமதியை அனுமதிக்குமாறு பாகிஸ்தானிலுள்ள திரைப்பட விநியோகஸ்தர்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். பாகிஸ்தானின் திரைப்படங்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்து, அங்கிருந்து இறக்குமதி செய்ய அனுமதிப்பதின் மூலமே இத்தொழில் அபிவிருத்தியடையுமென்றும், இப்போதுள்ள தடை நீடித்தால் இந்தியாவும் பாகிஸ்தான் படங்களுக்கு இறக்குமதித் தடை விதிக்கக்கூடுமென்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

# மூன்றில் இருமடங்கு

## வாக்களிப்பு பூர்த்தி

### காணமற்போன அபேட்சகர் கண்டுபிடிக்கப்பட்டார்

புதுடில்லி, பெப். 23

**இந்தியத் தேர்தலின் 8ம் நாளான இன்று 8 ராஜ்யங்களில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. இன்று வாக்களிப்பு முடிந்தவுடன் நாட்டின் மொத்த வாக்காளர்களில் 3ல் 2 பங்கு பேர் வாக்களித்து முடித்திருப்பார்கள்.**

நேற்று 9 ராஜ்யங்களில் ஓட்டுப் பதிவு நடைபெற்றன. இவைகளில் 60 சத விகிதத்திலிருந்து 90 சத விகிதமானோர் வாக்களித்துள்ளனர். மேற்கு வங்காளத்தில் சில இடங்களில் 80 சத விகிதமும், மத்திய பிரதேசத்தின் சில இடங்களில் 90 சத விகிதமும் வாக்களிக்கப்பட்டது. ஆந்திர பிரதேச சட்டசபையின் 293 ஸ்தானங்களில் 189 ஸ்தானங்களுக்குத் தேர்தல்கள் முடிந்துவிட்டன.

ஆந்திர பிரதேசம், காஷ்மீர், தமிழ் நாடு ஆகிய இடங்களில் வாக்குப் பெட்டிகள் பழைய முறையில் இருப்பதால் அவற்றுக்கு விசேஷ பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பஞ்சாபில் சட்டசபை ஸ்தானம் ஒன்றுக்கு போட்டியிடும் காணமற்போனதாகக் கூறப்பட்ட அபேட்சகர் ஒருவர் சுகமே இருப்பதாய் இப்போது தெரியவந்திருக்கிறது.

### இலங்கைக் கலைஞரின் பி. பி. ஸி. ஒலிபரப்பு

லண்டன்' பெப். 23

இலங்கை "ஸெலோ" வாத்தியக்காரரான ரோஹன் டிஸேரம் பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கார்ப்பரேஷனின் வெளிநாட்டு சேவையில் மார்ச் மாதம் 10-ந் திகதி சனிக்கிழமை பங்குபற்றுவார். பார்மிங்ஹாம் நகரஸிம்பனி வாத்தியக் கோஷ்டியில் அவர் தனி இசைட்டோனுகப் பங்குபற்றுகின்றார்.

ரோஹண்டிஸேரத்தை இளமையிலேயே வித்துவத்திறன் பெற்றவர் என்றும், வாலிபப் பருவத்தில், இன்றைய உலகின் சிறந்தவாத்திய நிபுணரில் ஒருவரென்றும் பி. பி. ஸி. தன் நிகழ்ச்சியில் விபரிக்கின்றது. ரோஹன் பி. பி. ஸி. க்கெனப் பலநிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருந்திருக்கிறார்.

### மண்ணெண்ணை மோசடி வழக்கு

#### எதிரிக்கு ரூ. 300 பிணை

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு - கல்லடியைச் சேர்ந்த திரு. தி. கைலாயநாதன் என்பவரால் மட்டக்களப்பு பார்வீதியில் நடத்தப்பட்ட மண்ணெண்ணெய் டிப்போவுக்குச் சொந்தமான 1267 ரூபாய் 50 சதம்பெறுமதியான 1350கலன் மண்ணெண்ணையை மோசடி செய்ததாக, மட்டக்களப்பு சென். அந்தோனியார் வீதியில், வசிக்கும் சாள்ஸ் என்பவர்மீது மட்டக்களப்பு பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரணைசெய்த மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட் திரு.எஸ். தம்பித்துரை, எதிரியாகிய இ. ஆர். டபிள்யூ. சாள்ஸ் என்பவரை ரூ. 300 பிணையில் செல்லும்படி உத்தரவிட்டு, மேல் விசாரணையை ஏப்ரல்மாதம் 7ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

### நாடகாசிரியருக்கு பாராட்டுவிழா

மட்டக்களப்பு, வெள்ளி

சிறந்த சிறுகதை எழுத்தாளரும், நாவலாசிரியரும், இலக்கிய விமர்சகருமான திரு. எஸ். பொன்னுத்துரை, இலங்கை கலைக்கழகம் நடாத்திய நாடகப்போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றதைப் பாராட்டுமுகமாக கிழக்கிலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கம் அவருக்குத் தங்கப் பதக்கம் அளித்துக் கௌரவிக்க ஏற்பாடு செய்துள்ளது.

நாளை நடைபெறவிருக்கும் இப்பாராட்டு வைபவத்திற்கு செனட்டர் மு. மாணிக்கம் தலைமை தாங்குவார். மற்றும் பல பிரமுகர்களும் பாராட்டுரை வழங்குவர்.

### இலங்கைச் சாரண விழாவில் பிரிட்டிஷ் பிரதிநிதி

லண்டன், பெப். 23

இலங்கை ஆண் சாரணரின் பொன்விழா பெப்ரவரி மாதம் 26 முதல் மார்ச் 3ந்திகதிவரை இடம்பெறும்பொழுது பிரிட்டிஷ் பிரதிநிதியாக லண்டன் காரியாலயத்திலுள்ள ஆண் சாரண சாம்ராஜ்ய கமிஷனர் திரு. சாள்ஸ்டிமொக் கிரீன் பங்குபற்றுவார்.

இவர் சமீபத்தில் தலைமைச் சாரணர் ஸேர் சாள்ஸ் மக்ளினுடன் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஹாங்காங் ஆகிய இடங்களுக்குச் சென்றார்.

திரு. கிரீன் இலங்கையிற் பல வருடகாலமாக ஒரு வர்த்தகக் கம்பனியில் வேலைசெய்தவர்.

### தேசியவாதிகள் ஆலோசனை

டிரிப்போலி, பெப். 23

லிபியாத் தலைநகரான டிரிபோலியில் அல்ஜீரிய தேசிய பார்லிமெண்ட் கூடி பிரெஞ்சு-அல்ஜீரிய போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பரிசீலிக்க ஆரம்பித்தது.

# மொஸாம்பிக்கில் இந்திய குழந்தைகளின் அவதி

## பெற்றோர்கள் காவலில் வைக்கப்பட்டதின் விளைவு

உம்தாரி, பெப். 23

மொஸாம்பிக்கில் காவலில் வைக்கப்பட்டுள்ள 2300 இந்தியர்களின் குழந்தைகளில் பெரும்பாலோர் அனாதைகளாகி விட்டனர். அவர்கள் தங்குவதற்கு இடமின்றி தவித்துக்கொண்டிருப்பதாக இங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

மேற்கூறிய குழந்தைகள் காவலில் வைக்கப்படவில்லை. ஏனெனில் அவர்கள் மொஸாம்பிக்கில் பிறந்து வளர்ந்ததால், அவர்கள் போர்ச்சுக்கீசிய பிரஜைகளாகவே கருதப்படுகின்றனர். அவர்கள் தெருக்களில் இஷ்டம்போல திரிவதற்கு விடப்பட்டுள்ளனர்.

காவலில் வைக்கப்பட்டுள்ள இந்தியர்களின் வீடுகளும் கடைகளும் முத்திரையிடப்பட்டன. ஆகவே அவர்களுடைய குழந்தைகள் எங்கும் தங்க முடியாமல் தெருக்களில் திரிய வேண்டியதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. இந்தியர்களின் பாங்கு பணமும் முடப்பட்டுவிட்டது. அவர்கள் தமது குழந்தைகளுக்கு உணவு, இருப்பிடம் முதலியவற்றிற்கு வசதி செய்ய முடியவில்லை.

சில குழந்தைகள் தமது பெற்றோர்களின் நண்பர்களுடன் தங்கி வாழுகின்றனர். மற்றக் குழந்தைகள் தெருக்களில் சுற்றிக்கொண்டிருக்கின்றனர்.

டிசம்பர் மாதம் 18-ந் திகதி கோவாவில் இந்தியா நடவடிக்கை எடுத்த பிறகு, காவல் முகாம்கள் திறக்கப்பட்டன. இந்தியர்கள் சென்ற 2 மாதங்களாக காவலில் இருந்து வருகின்றனர். அவர்கள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரியவில்லை.

மொஸாம்பிக், லோரன்ஸோ மார்க்கஸில், பியாரா என்னுமிடத்திலேயே பெரிய காவல் முகாம்கள் இருக்கின்றன.

பிரிட்டிஷ் பிரயாண அனுமதிச் சீட்டுகளை வைத்திருக்கும் இந்தியர்கள், தம்மை விடுதலை செய்து மீண்டும் தொழிலை நடத்த அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

போர்ச்சுகீசிய கிழக்காபிரிக்காவில் சில்லறை வியாபாரம் முழுவதும் இந்தியர்கள் வசமே இருக்கிறது.

காவல் முகாம்களில் ஒவ்வொரு அறையிலும் 12 இந்தியர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். முகாமில ஒரு புறம் ஆண்களும், மற்றொரு புறம் பெண்களும் அடைக்கப்பட்டுள்ளனர் இவ்வாறு குடும்பங்கள் சிதறடிக்கப்பட்டுள்ளன. முகாம்களில் சுகாதார நிலையும் மிகவும் மோசமாக இருக்கிறது.

600 போர்ச்சுகீசிய துருப்புகள் மொஸாம்பிக் தலைநகரான லாரண்மார்க்விஸுக்கு வந்து சேர்ந்துள்ளன. அங்குள்ள படைபலத்தைப் பலப்படுத்துவதற்காகவே இந்தத் துருப்புக்கள் வந்திருக்கின்றனவாம்.

மணி வாக்கு
'ரோஜாச் செடியில் முள் இருப்பதற்கு வருந்தாதே. முள் செடியில் மலர் இருப்பதற்கு மகிழ்வாய்'

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
மாசி மீ 13 உ (24-2-62)

## கலைப்புலவர்

தமிழ் மொழியையும் தமிழ்க் கலைகளையும் போற்றி வளர்த்து வந்த ஒரு தமிழ்ப் பெரியாரை நாடு இழந்துவிட்டது. கலைப் புலவர் க. நவரத்தினம் அவர்களின் பெரும் பிரிவையே இங்கு குறிப்பிடுகின்றோம். உயர் ஞானிகள் ஞானத்திற் கண்ட பேரொளியைக் கலைஞர்கள் உருவிலும் திருவிலும் தோற்றுவிக்கின்றனர்என அறிஞர்கள் கூறியிருக்கின்றனர். கலைப்புலவர் நவரத்தினத்தின் பண்புமிக்க வாழ்க்கையை நோக்குபவர்களுக்கு அந்த உண்மை நன்கு விளங்கும். கலை விமர்சகராக விளங்கிய கலைப்புலவர் கலை, சமயம், இலக்கியம் ஆகிய துறைகளில் மிகுந்த அறிவு படைத்தவர். பழமையைப் போற்றிப் புதிய கருத்துக்களை அளவோடு வரவேற்றுத் தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடியவர்.

கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி அவர்களைப் பின்பற்றி இலங்கையின் கலை வளத்தைத் தமிழ் மக்களும் அறிந்துகொள்ளவேண்டுமென்ற ஆர்வத்துடன் அரிய நூல்களை ஆக்கி உதவியுள்ளார். அவருடைய இல்லமே ஒரு கலைக் கோயிலாகத் திகழ்கின்றது.

சாதி, மதம, உயர்வு, தாழ்வு என்ற எல்லைகளை எல்லாம் கடந்து அவர் சமூகப் பொது வாழ்வில் ஈடுபட்டு உழைத்து வந்தார். காந்திஜியின் தலைமையில் இந்தியாவில் எழுந்த தேசிய உணர்ச்சியும், விடுதலை ஆர்வமும் அவரது உள்ளத்தையும் பற்றிக்கொண்டன. எனவே, இலங்கையிலும் சுதந்திர வேட்கையை ஏற்படுத்துவதற்காக இங்குள்ள இயக்கங்களுக்கு உறுதுணையாக நின்று பணியாற்றிவந்தார்.

தமிழ்ச் சமுகம் சிறப்புற வேண்டுமானல் தீண்டாமை ஒழியவேண்டுமென்பதை மக்களுக்குத் தமது எழுத்துக்களாலும், மேடைப் பேச்சுக்களாலும் விளக்கிக் காட்டியதுமன்றி தாழ்த்தப்பட்டவர்களின் நல்வாழ்வுக்காகவும் உழைத்து வந்தார்.

ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் அவர்களின் உரிமைக்காகத் தமது நண்பர்களின் உதவியுடன் வாதாடிவந்தார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அவர் உதவியாசிரியராகப் பணியாற்றிய காலத்தில் "அவர் பொது வாழ்வில் மிகுந்த ஆர்வத்துடன் உழைத்துவந்ததை நாடு அறியும். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற எல்லா நல்ல காரியங்களிலும் பங்குபற்றித் தமது ஆலோசனைகளைக் கூறிவந்தார்.

சைவ சித்தாந்தத்தில் காலூன்றி நின்று தமிழை அவர் வளர்த்துவந்தபோதிலும் பிற மதங்களை மதித்து அவற்றின் சிறப்புகளைப் போற்றிவந்தார். இதனுல் பிற நாட்டு அறிஞர்களின் அன்பும் மதிப்பும் இவருக்கு என்றுமே கிடைத்துவந்தன. நல்லாசிரியராகவும், நண்பனுகவும், எழுத்தாளராகவும், கலைஞராகவும், தேசபக்தனுகவும், தொண்டனுகவும் விளங்கிய கலைப்புலவர் வணிகத் துறையிலும் மாணவர்களுக்கேற்ற நூல்களைத் தமிழாக்கித்தந்துள்ளார். அவருடைய ஆங்கில அறிவின் பரப்புத் தமிழ்மொழி ஆக்கத்துக்கு பேருதவியாக இருந்தது.

தமிழ் நூல்களை உயர்ந்த முறையில் வெளியிடவேண்டுமென அவர் விரும்பினர். அவ்வாறே தமது நூல்களையும் நல்ல முறையில் வெளியிட்டுள்ளார். சுகாதார கைப்பணி தொடக்கம் கலையாக்கம்வரை எதிலும் நிறைவுகாண விரும்பி அத்துறைகளில் சலியாது உழைத்த பெரியார் இனி எமக்கு இல்லை. எனினும் அவருடைய இலட்சிய வாழ்வு மக்களுக்கு ஒரு முன்மாதிரியாகும்.

அவருடைய நினைவு என்றும் நின்று நிலவுவதுடன் அவருடைய பணியைத் தொடர்ந்து நடாத்துவதற்கும் உதவும் வகையில் அவருடைய அழியாச் செல்வமான நூல்களை எல்லாம் பொது மக்களின் உபயோகத்துக்குப் பயன்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்வது ஒரு சிறந்த பணியாகும் என்பதை இங்கு கூற விரும்புகின்றோம்.

கலைப்புலவரின் பிரிவு ஈடு செய்யமுடியாத நஷ்டமாகும். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும். உறவினருக்கும், அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த அனுதாபங்கள் உரியதாகும்.

இலங்கை பெற்ற

# கலைப்புலவர் நவரத்தினம் பெரும் பிரிவு

## தோற்றம்: 15-11-1898 பிரிவு: 22-2-1962



யாழ்ப்பாணத்தில்ஒருகலைக் கோயில். கலைமகளும், திருமகளும் அங்கு இணைந்து வாழும் அற்புதத்தைக் காணலாம். தென்னட்டுக் கலைச் செல்வங்களும் வண்ண ஓவியங்களும் அந்தக்கலைக்கோயிலுக்குளழில் ஊட்டுகின்றன. எங்கு பார்த்தாலும் கலைப்பொக்கிஷங்கள். ஓவியங்கள் சிற்பம் செறிந்த வெண்கல வெள்ளிப்பாத்திரங்களும் திருவுருவங்களும், எழிற் கோலங்களும் பொலிவூட்டுவன. கலாயோகி என்ற புகழுக்குரிய ஆனந்தக்குமாரசுவாமியின் திருவுருவம் தூய்மையான இடத்தில் அங்கு வைக்கப்பெற்றிருக்கிறது. சமயம், கலை, தத்வஞானம், சரித்திரம் சம்பந்தமான இரண்டாயிரத்துக்கும் அதிகமான சிறந்த நூல்களைக்கொண்ட 'கலாநிலையம்' 1930-ம் ஆண்டிலேயே நிறுவப்பட்டுவிட்டது. இங்கு ஏட்டுப்பிரதிகள் பலவுள. இந்தக் கலைக்கோயில் தான்வண்ணர்பண்ணையிலுள்ள 'சாந்திநிகேதன்'.

இக்கலைக்கோயிலின் சிற்பி கலையுள்ளம்படைத்தவர். சைவமும் தமிழும் அன்னரின் இரு கண்கள். கலைப்பணியே அவரது வாழ்வின் திருப்பணி, வெண்ணிற ஆடை அணிந்து பொலிவுடன் அவர் தோற்றமளிப்பார். இவர்தான் யாழ்ப்பாணம் 'சாந்திநிகேதன்' தந்த கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள்.

இந்த யாழ்ப்பாணக் கலைக் கோயிலின் காட்சியை நித்தமும் கண்டவர்கள், அனுபவித்தவர்கள், உறவுகொண்டவர்கள்ஆகியோர் தம்கண்களையே நம்பமாட்டார்கள். நெருநல் உளனெருவன் இன்றில்லை என்னும் பெருமையை இந்தஉலகு எப்பொழுதும் தனதாக்கிக் கொள்ளுகிறது. நல்லவர்களும் மேதைகளும் கலைஞர்களும் என்றோ ஒருநாள் இவ்வுலகை விட்டு நித்திய அமைதியை நாடிச் சென்றுவிடுகின்றனர். நேற்று எம்முடன் இருந்தவர் திடீரெனச் சுகவீனமுற்று வியாழக்கிழமை இரவு இறைவனடி எய்திவிட்டார். கலைச் செல்வங்களை வாரி வழங்கிய கலைப் புலவர் மறைந்துவிட்டார். கலைத்தொண்டில் நிறைவுகண்ட கலைஞர் அமைதியைத் தேடிச் சென்றுவிட்டார். ஈழத்தமிழகம் இணையில்லாப் புதல்வனொருவனை இழந்துவிட்டது; கலைஞர்கள் கலைக்கோயில்கண்ட சிற்பி ஒருவரை இழந்துவிட்டனர். ஆசிரியர்கள் தங்கள் முன்னேடி ஒருவரை இழந்துவிட்டார்கள். யாழ்ப்பாணம் சாந்திநிகேதன் பெருவாழ்வின் பொலிவை இழந்து நிற்கின்றது. கலைப்புலவர் நவரத்தினம் அவர்களின் பிரிவு தமிழ் உலகிற்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும்.

(5-ம் பக்கம் பார்க்க)

இரத்தினக் கம்பளம்

## 'பிரப்பம்பழப் பூசை'

பதுமன்

அதிகாலையில் நாலு மணிக்கு எழுந்து துலா மிதித்துத் தோட்டப் பயிர்களுக்கெல்லாம் தண்ணீர் இறைத்தபின் துரிதமாகக் குளித்துக்கொள்வேன். அதன் பின்னர் இடியப்பமும் சொதியும், அல்லது பிட்டும் வாழைப்பழமும் சாப்பிடுவேன். சில வேளைகளில் பழஞ்சோறும் கிடைக்கும். அதனைக் குழையலாகச் சாப்பிடுவேன். அவசர அவசரமாகச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாகப் பள்ளிக்கூடம் செல்வேன். பள்ளிக்கூடத்துக்குப் பிந்தினுல் கிடைப்பது சுமாரான 'பிரப்பம்பழப் பூசை'தான்.

இது பதுமனரின் சுயசரிதையில் ஒரு சிறு பகுதியென எவரும் எண்ண வேண்டியதில்லை. ஈழப் பாட்டனர் சுந்தரலிங்கம் தான் இப்படியெல்லாம் தனது பேரப்பிள்ளைக்கு எழுதுகின்ருர்.

●

### வடிசாராயம்

அதுமாத்திரமா? உரும்பிராயில் தயாரிக்கப்படும் வடிசாராயத்தைப் பற்றியும் சுவையாக எழுதியிருக்கின்ருர். தாய்மார் பிள்ளைகளைப் பெற்றபின் வீட்டுப் பராமரிப்புக் காலத்தில் இந்த வடிசாராயத்தை விசேஷமாக அருந்துவார்கள். இதன் குண விசேஷத்தைப்பற்றி பேராசிரியர் சுந்தரலிங்கம் அழகாக எழுதியிருக்கின்ருர். ஆமாம்! நாளைக்குவெளியாகும் 'ஈழநாடு' வாரப்பதிப்பில் இப்படி எத்தனையோ சுவையான காரியங்களை அவர் கூறுகின்ருர். நீங்களே படித்துப்பாருங்களேன்!

●

### 'சிங்ககிரிக் காவலன்'

ஈழத்தில் இப்போது நாடகத் துறையில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. எழுத்தாளர்கள் நாடகங்களை எழுதுகின்றனர். நடிகர்கள் உற்சாகத்துடன் மேடை ஏறுகின்றனர். பொதுமக்கள் நாடகங்களைப் பார்த்து ரசிக்கின்றனர். கூத்தாடுவது ஆற்ருதவன் செயல் என்று எள்ளி நகையாடிய காலம் போய், நடிகர்களைப் போற்றவும் பொன்னடை போர்த்திக் கௌரவிக்கவும் மக்கள் நீயோ, நானே என்று போட்டி போடுகின்றனர்.

இவையெல்லாம் நல்ல அறிகுறிசள்தாம். இந்தமாதிரியான ஒரு சூழ்நிலையில் யாழ்ப்பாணம் தமிழ்ப் புத்தக வெளியீட்டுக் கழகத்தினர் 'சிங்ககிரிக் காவலன்' என்ற நாடகத்தை யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் முற்பகுதியில் அரங்கேற்றுகின்றனர். பிரபல சிறுகதை எழுத்தாளர் 'சொக்கன்' எழுதிய இந்நாடகம் பல்கலைக் கழக நாடகப் போட்டியில் முதற் பரிசைப் பெற்றுள்ளது. இந்நாடகத்தினுல் சேரும் பணம் நல்ல தமிழ்ப் புத்தகங்களை வெளியிடுவதற்குப் பயன்படுத்தப்படும் என அறிகின்றேன். இந்த நாடகத்தைப் பார்ப்பது ஒரு நல்ல பொழுது போக்காக அமைவதுடன் அதிற் சேரும் பணம் நல்ல காரியத்துக்கும் பயன்படப்போகின்றது. நாடக அபிமானிகளே, உஷார்!

●

### குருடும் குருடும்

குருடர் ஒருவருக்கு மற்ருெரு குருடர் வழிகாட்டினுல் இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் என்பது பழமொழி. ஆனல் இதனைப் பொருட்படுத்தாது இரு குருடர் ஒருவர்க்கொருவர் வழிகாட்டியபடி பொதுத் தேர்தலில் வாக்களித்த சம்பவம் சாத்தூர் சட்ட சபைத் தொகுதியில் (இந்தியா) நடந்திருக்கிறது.

பார்வையிழந்த ஒரு கிழவியை அழைத்துக்கொண்டு மற்ருேர் இளம் குருடர் வாக்குகள் அளிக்கும் சாவடிக்குச் சென்ருர். இருவரும் நீண்ட தடியைப் பிடித்துக்கொண்டு சென்றனர். இப்படிக் கஷ்டப்பட்டுச் சென்ற வாக்காளர்கள் அவர்களின் அபிமான அபேட்சகருக்கு வாக்களிக்க தேர்தல் அதிகாரி உதவி செய்தாராம்.

●

### 115 வயது மூதாட்டி

நமக்குத்தான் வயதாகிவிட்டதே. 'வீடு போ போ என்கிறது: காடு வா வா என்கிறது' என்று ஏனேதானே என இல்லாமல் 115 வயது நிரம்பிய மூதாட்டி ஒருவர் தமது கடமையைக் கடைசிவரை செய்ய முயன்ருர். இவர் பேரப்பிள்ளைகளுடன் வாக்குகள் அளிக்கும் சாவடிக்குச் சென்ருராம் நடுநடுங்கும் தனது கைகளினுல் வாக்குச் சீட்டைப் பெற்று தனது அபேட்சகருக்கு முத்திரையிட்டு வாக்குப் பெட்டியில் போட்டாராம். குடியாத்தம் பகுதியைச் சேர்ந்த இந்த மூதாட்டிக்கு 120 பேரப்பிள்ளைகள் இருக்கின்றனராம்

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்திலே இரு இடங்களில் ஸ்ரீதியாகராஜர் சங்கீத உற்சவம் நடப்பதாக அழைப்புக் கிடைத்தது. வண்ணை நாவலர் வித்தியாசாலையிலே நேற்று முதல் அகில இலங்கை இசைஆசிரியர் சங்கத்தார் 3 நாட்களுக்கு இசைவிழா நடத்துகிருர்கள். ஒருநாளைக்கு பத்துஅரைமணி கச்சேரிகளுக்கு ஒழுங்கு செய்துள்ளனர். ஆண்களும் பெண்களுமாகப் பலர் பாடுபடுகின்றனர்.

மற்ருேர் அழைப்பு இராமநாதன் இசைக்கல்லூரி அதிபர் மகாராஜபுரம் சந்தானத்திடமிருந்து. அக்கல்லூரியில் ஞாயிறு மாலை 6 மணிக்குக் ஸ்ரீதியாகராஜசுவாமிஆராதனை விழா நடக்கிறதாம். இருஇடங்களிலும் நீதிஅரசர் டாக்டர் தம்பையா,அரைமணி முன்பின்னுகப் பேசுவதாக அறிவித்துள்ளார்கள். இவ்வழைப்புகளைக்காண மிக மகிழ்ச்சியாக இருந்தது.

* * *

ஸ்ரீதியாகராஜர் தமது தாய்மொழியான தெலுங்கில் ஸ்ரீராமனைப்பற்றி பல கீர்த்தனைகளைப் பாடினுர். தமிழர்கள் போட்டியுடன் அவற்றைப் பயிலுவதுடன், அவருக்காக ஈழநாட்டிலும் விழா நடத்துகின்ருர்கள். இதிலிருந்து தமிழருக்கு மொழிவெறியோ, மதவெறியோ இல்லை என்பது தெளிவாகும்.

சாகித்திய கர்த்தாக்கள் பலர் இருந்தும் ஸ்ரீதியாகராஜருக்கு தமிழர்விழா நடத்துவானேன்? ஸ்ரீ தியாகராஜரின் தாய்மொழி தெலுங்காயினும், தமிழ்நாட்டில் பிறந்து, அங்கு வளர்ந்து, தொண்டு செய்து அங்கே முக்தியடைந்தவர். ஆகவே அவரை தங்கள் தமிழ் நாட்டின் செல்வமென்றே தமிழர் கொள்ளுகின்றனர்.

இரண்டாவதாக, அவர் வெறும் சாகித்தியகர்த்தா அல்லர். பக்தசிகாமணி, ஜீவன் முக்தர். கடவுளை நேரில் தரிசித்தவர். அவரது பாடல்களே இதற்கு அத்தாட்சி. இசை மூலம் இறைவனை அடைய வழி காட்டியவர். ஆகவே அவரைத் தமிழர் உள்ளிட்டுப் பல பல மொழி பேசபவர்களும் போற்றுகின்ருர்கள்.

அவர் பெயரால் இசை விழாக்கள் நடத்தி, அவரது கீர்த்தனைகளைப் பாடுவது நல்லதே. ஆனல் அப்பாடல்களிலுள்ள கருத்தை உணர்ந்து, அதன்படி ஒழுக முற்படுகிறவர்களுக்கே அதிக பலன் கிடைப்பதாகும்.

* * *

சென்ற ஜனவரி மாதம் கடைசி வாரத்தில் திருவையாற்றிலே தியாகராஜ உற்சவம் நடந்தபோது, டில்லியிலிருந்தேன்.உபராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுடன் இலங்கைப்பத்திரிகைக் கோஷ்டியினர் பேசிக் கொண்டிருந்தபோது, வீட்டுக்குள்ளிருந்து ஸ்ரீதியாகராஜ இன்னிசை கேட்டது. ஏது இந்தக் கர்நாடக இன்னிசை? என்று கேட்டார் ராதாகிருஷ்ணன். திருவையாற்றில் நடக்கும் உற்சவத்தை ஆகாசவாணி அஞ்சல் செய்து ஒலிபரப்புவதாகக் கூறினேன்.

"ஓ! ஆமாம்! நேற்று எம். எஸ். அதே உற்சவத்தில் பாடினுரே. எவ்வளவு நன்ருக இருந்தது! உங்களுக்கு எம். எஸ். ஸின் இன்னிசை பிடிக்குமா?" என்று எங்களை ஆவலுடன் கேட்டார் அவர்.

"வடக்கே (யாழ்ப்பாணத்தில்) உள்ளவர்களுககுப் பிடிக்கலாம், எங்களுக்குப் பிடிக்காது"என்று ஒரு சிங்கள நண்பர் கூறியதும், டாக்டரும் திடுக்கிட்டார்.எம்.எஸ். ஸின் சங்கீதமும் பிடிக்காதா? என்று மீண்டும் கேட்டார். மற்ற சிங்கள சகாக்கள் பின்னர் என்னிடம் பேசுகையில்,

(5-ம் பக்கம் பார்க்க)

# கலைப்புலவர்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

### ஈழத்து அறிஞர்

ஈழத்து அறிஞர்களில் ஒருவரான கலைப்புலவர் நவரெத்தினத் கலைவளர்த்த குடும்பத்தில் தோன்றியவர். யாழ்ப்பாணம்மத்தியகல்லூரியில் ஆசிரியராகப் பலவாண்டு வ் அரும்பணி புரிந்தவர். வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டிருந்தார். 1920-ம் ஆண்டு தொடக்கம் 1958-ம் ஆண்டு வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து அவ்வாண்டிலேயே அத்தொழிலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார் இறக்கும்போது வயது 64.

கலை, சமயம் ஆகிய துறைகளில் அவர் நிரம்பிய புலமை பெற்றிருந்தார். "தென் இந்திய சிற்ப வடிவங்கள்" என்ற நூலை எழுதித் தமிழ் உலகுக்கும் கலையுலகுக்கும் அளித்துள்ளார்.

இதுவரை தமிழில் வெளிவராத நல்ல நூல் என்று பலராலும் பாராட்டப் பெற்றது. இதுவே தமிழில் வெளியான !முதற் சிற்பக்கலை நூலாகும். "தமிழ் மொழிக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் செய்த தொண்டை ஸ்ரீ நவரத்தினம் தமிழ்ச்சிற்பத்திற்குச் செய்திருக்கிறார் என்று சொல்லலாம். தமிழ் நாட்டில் எந்தப் புத்தகசாலையில் இந்த அரிய புத்தகம் வைக்கப்படவில்லையோ, அந்தப் புத்தகசாலையை மூடி விடுவதே உத்தமமாகும்" என்று இந்நூலைப்பற்றி காலஞ் சென்ற அமரர் கல்கி குறிப்பிட்டிருக்கிறார்.

### கலையார்வம்

கைப்பணியைக் கலையம்சத்துடன் வளர்க்க வேண்டும் என்ற ஆர்வமுடையவர் கலைப் புலவர். "யாழ்ப்பாணக் கலையும் கைப்பணியும்" என்ற நூலில் யாழ்ப்பாணக் கலைஞர்களின் திறமையை நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். "யாழ்ப்பாணத்திலுள்ள நெசவுத் தொழில் அநேகமாக இறந்துவிட்டது. சாயம் தோய்க்கும் தொழிலும், துணியிற் கையால் அச்சிடும் தொழிலும் மறைந்து கொண்டே வருகின்றன. சரிகை சித்திர வேலை தளர்ச்சியுறுவதும் அதை வெகு சிலரே விரும்புவதும் மிகவும் வருந்தத்தக்க செயலாகும். நுண்கலை என்ற வகையில் தச்சுத் தொழில் படிப்படியாக இறக்கிறது. ஆனால் தொழிலாக அது வளர்கிறது" வருத்தப்பட்டு இவ்வாறு இன்றைய நிலையைக் கண்டு வருந்தும் கலைப்புலவர் அதனை நிறைவாக்கும் வழியையும் கூறியிருக்கிறார். "எங்கள் ரசனையும் மதிப்பிடும் தன்மையும் மாறினாலன்றி எமது தொழில்களுக்குக் கலைவனப்பை உண்டு பண்ண இயலாது. எமது வீடுகளில் விலைமலிமான கலை வனப்பற்ற, நிலையில்லாத கலன்களை உபயோகிப்பதற்குப் பதிலாக, தேவைப்படும்பொழுதும் தேவையாகுமிடத்திலும் எமது மரபிலுள்ள கருவிகளை உபயோகிக்கத் தொடங்கவேண்டும். நமது பெண்கள் மேல் நாட்டு வியாபாரிகளின் பட்டியலிற் காணும் வடிவங்களை உபயோகிப்பதற்குப் பதிலாக நமது மரபிலுள்ள அழகிய வடிவங்களில் அவர்கள் அணிகலன்கள் செய்து அணிய விரும்புதல் வேண்டும்" இவ்வாறு தமது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

### கலா நிலையம்

1930-ம் ஆண்டில் யாழ்ப்பாணக் கலா நிலையத்தை நிறுவினர். இங்கு ஏட்டுப் பிரதிகள் தொடக்கம் சிறந்த தமிழ் ஆங்கில நூல்கள் ஆயிரக்கணக்கில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. அவ்வப்போது இங்கு அறிஞர்களின் விரிவுரை நடைபெற்றன. 'ஞாயிறு' என்னும் கலையாக்கம் கருதிய வெளியீடும் அவர்களால் வெளியிடப்பெற்றது.

சமயப்பற்று மிக்க இப்பெரியார் சைவசித்தாந்தத்தையும் பிற மதங்களையும் நன்கு பயின்றவர். 1943-ம் ஆண்டில் கண்டியில் நடைபெற்ற சர்வமத கோட்பாடுகளின் மாநாட்டில் சைவசித்தாந்தம் பற்றி நிகழ்த்திய விரிவுரை புகழ்பெற்ற ஒன்றாகும். சைவசித்தாந்தம் வேதாகம சைவசித்தாந்தம் பற்றியும் பல கட்டுரைகளை அவ்வப்போது எழுதியுள்ளார் விரிவுரைகளும் ஆற்றியுள்ளார்.

கலைப்புலவர் திறமையும் ஆற்றலும் வாய்ந்தவர். பல பொதுப்பணிகளிலும் ஈடுபட்டு உழைத்தவர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழ் விழா சிறப்புடன் நடைபெறப் பணியாற்றியவர்களுள் கலைப்புலவரும் முக்கியமானவர்.

1939-ம் ஆண்டில் மிகச் சிறந்ததொரு கண்காட்சியை நடத்தினர். அதில் பௌத்த, பால, இந்து, இராஜபுத்திர, இராக-இராகினி ஓவியங்களும், ஒரிசா, நேபாள தேசத்து ஓவியங்களுமாக எழுபத்தொரு கண்கவர் ஓவியங்கள் இக்கண்காட்சியில் இடம் பெற்றிருந்தது.

### புதுடில்லியில்

1956-ம் ஆண்டில் புதுடில்லியில்நடைபெற்ற ஆசியஎழுத்தாளர் மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாக பங்குபற்றி கலை சம்பந்தமான விரிவுரையை ஆற்றி அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

இலங்கையில் சுதந்திர இயக்கத்துக்கு வித்திட்ட பெருமை யாழ்ப்பாணம் வாலிப மாநாட்டிற்கு உண்டு. 1929, 30, 31-ம் ஆண்டுகளில் வாலிப மாநாட்டின் ஆதரவில் நடைபெற்ற கலை, கைத்தொழில் கண்காட்சியின் திட்டக் குழுவிற்கு செயலாளராக இருந்திருக்கிறார். வடமாகாணமதுவிலக்குச்சபை, ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம் யாழ்ப்பாணக்கலைக் கைப்பணிக் கழகம் ஆகியவற்றின் செயலாளராகவும், யாழ்ப்பாணம் நூதனசாலை ஆலோசனைக் குழுவிலும், இலங்கை தேசிய நூதனசாலை ஆலோசனைக் குழுவிலும் அங்கத்தவராகவும் விளங்கினர். இலங்கை அரசினர் கலைக்கழக சிற்ப ஓவியப் பிரிவிலும் மூன்று வருடங்கள் அங்கத்தவராகக் கடமையாற்றினர். யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையக் குழுவின் தலைமைப் பதவியையும் வகித்தார்.

### வாழ்க்கைத் துணைவி

கலைப்புலவரின் வாழ்க்கைத் துணைவி 'தமிழ் மகள்' ஆசிரியை மங்கம்மாளினதும், தமிழகத்திலும்புகழ் பரப்பியஈழத்து மாசிலாமணியின் முதலாவது மகளான திருமதி மகேஸ்வரிதேவியார் கலைகளுக்கு இருப்பிடமாக விளங்குபவர். வீணை, ஜலதரங்கம், சித்தார், கோட்டு வாத்தியம் ஆகிய இசைக் கருவிகளை திறமையுடன் மீட்டும் வல்லமை படைத்தவர். 'A First Book of Indian Music', 'Veena Tutor' ஆகிய இசை சம்பந்தமான ஆரம்ப நூல்களை ஆக்கி அளித்திருக்கிறார் தேவியார். உலகம் புகழும் வங்கக் கவிஞர் தாகூரின் 'விஸ்வ பாரதியில்' 2 ஆண்டுகள் பயின்றவர். இதன் பயனாக 1934-ம் ஆண்டில் தமது குருவான வரகவி தாகூரை யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்தார்கள். தாகூரின் வருகையைத் திட்டமிட்ட செயற்குழுவுக்குச் செயலாளராகவிருந்து திறம்படப் பணியாற்றினர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பல கண் காட்சிகள், பொருட்காட்சிகள் ஆகியவற்றிற்கு ஆலோசகராகவிருந்து கடமையாற்றியவர்களில் கலைப்புலவர் முக்கியமானவர்.

யாழ்ப்பாணத்தில் சாதிக் கொடுமை உச்சமாக இருந்த காலத்திலேயே 1920-ம் ஆண்டில் ஆனைப்பந்தியடியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென ஒரு பாடசாலையை அமைத்து 'சம ஆசனம்' அளித்துத் தொண்டாற்றியிருக்கிறார். ஆலயங்களில் மிருக பலியை அகற்றவும் பாடுபட்டுழைத்தவர்.

### நூல்கள்

Bhagavad Gita - A Study, Advita Vedanta, Saiva Siddanta, Hindu Temple Reform ஆகிய சமய நூல்களையும், தென் இந்திய சிற்ப வடிவங்கள். இலங்கையிற் கலை வளர்ச்சி, இந்திய ஓவியங்கள், Arts and Crafts of Jaffna, Development of Art in Ceylon, Religion and Art ஆகிய கலை நூல்களையும், கணக்குப் பதிவு நூல், உயர்தரக் கணக்குப் பதிவுநூல், இக்கால வாணிப முறை ஆகிய வாணிப நூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

'Studies in Hiduism' என்ற ஆங்கில நூல் கலைப்புலவரின் இறுதிப் படைப்பாகும் இப்புத்தகம் இப்பொழுது அச்சாகி வருகின்றது.

"இலங்கையில் கலை வளர்ச்சி" என்னும் நூல் அரங்கேற்றத்தின் போது யாழ்ப்பாண மக்கள் சார்பில் 'கலைப் புலவர்' என்ற கௌரவப் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

தமது இறுதி நேரம் வரை பொது வாழ்விலும் கலைத்துறையிலும் பெரும் பணியாற்றிய இப்பெரியாரின் பெரும் பிரிவு இலங்கைக்கும் தமிழ் உலகுக்கும் ஈடுசெய்யமுடியாத நஷ்டமாகும்.

---

## 8 மாதங்களாக சம்பளம் கொடுபடவில்லை

திருக்கோணமலை, வெள்ளி

ஈச்சிலம்பட்டை கிராம பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கு, கடந்த எட்டு மாதகாலமாக சம்பளமோ அல்லது நியமனக் கடிதங்களோ எதுவும் கிடைக்கவில்லை.

இதுகுறித்து காரியதரிசி திரு. ஆர். கணேஷன் கல்வி இலாகாவுக்கும், கல்வி மந்திரிக்கும் பல கடிதங்கள் எழுதியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மனமுடைந்த ஆசிரியர்கள், அண்மையில் மூதூர் எம். பி. திரு. ஏ. எல். மஜீத்தை சந்தித்து இதுபற்றி முறையிட்ட சமயம், தாம் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக எம். பி. தெரிவித்தார்.

ஈச்சிலம்பட்டை பாடசாலை, ஈச்சிலம்பட்டை கிரமசபையினுல் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

---

## கிரிக் கெட் போட்டி

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித் துறைக் காட்லிக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெற்றகிரிக்கெட் போட்டியில் யாழ்பபாணம் மத்திய கல்லூரி எட்டு விக்கட்டுகளால் காட்லிக் கல்லூரிக்கோஷ்டியை தோற்கடித்தது.

---

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களுக்கு எம். எஸ். ஸின் சங்கீதமென்றால் மிகவும் பிடிக்குமென்று கூறி, தங்கள் மற்ற சகா கூறியதை மறுத்தனர். நல்லவேளை!

* * *

இம்முறை திருவையாற்றிலே இசையாளர்களுக்குள்ளிருந்த கட்சி பேதங்கள் மறைந்து, சமாதியிலேயே 3 நாளும் மிகச் சிறப்பாக விழா நடந்ததாகக்கேள்விப்பட்டேன். பலே பேஷ்.

* * *

"ஹரே ராம நீ நாமம் ஏமி ருசிரா?" (ஹே ராம! உன் பெயரில்தான் எவ்வளவு ருசி இருக்கிறதடா!) "நேனு எசட ஜூசி நானு நீவே உன்னதி" (நான் எங்கு பார்த்தாலும் நீயே காட்சி அளிக்கிருய்.)

— ஸ்ரீ தியாகராஜர்

---

## கிரிமினல் சட்டவிரோத மசோதாவுக்கு 55 திருத்தங்கள்

கொழும்பு, வெள்ளி

ஐக்கிய தேசியக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, தமிழரசுக் கட்சி ஆகியன நேற்றுக் கூடி கிரிமினல் சட்ட விசேஷ மசோதா கமிட்டி நிலையில் விவாதிக்கப்படும்போது தாங்கள் கொண்டுவரவிருக்கும் திருத்தங்களை அங்கீகரித்தன. அரசாங்கம் மசோதாவுக்கு 6 திருத்தங்களைக் கொண்டு வரும். திரு. தஹநாயக்கா 6 திருத்தங்களைக் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார். அரசாங்க, எதிர்க்கட்சிகளின் சார்பாக மொத்தம் 55 திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

தமிழரசுக்கட்சிதான் அதிகப்படியான திருத்தங்களைக் கொண்டு வரும். அடுத்தாற்போல் ஐக்கிய தேசியக்கட்சி அதிகப்படியான திருத்தங்களைக் கொண்டுவரும்.

---

## இசை விழா

### இன்று 2-வது நாள்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை இசை ஆசிரிய சங்க ஆதரவில் நடைபெறும் ஸ்ரீ தியாகராஜா சுவாமிகள் உற்சவ இசைவிழா இன்று இரண்டாவது நாளாக நடைபெறவிருக்கிறது. இன்றையகலை நிகழ்ச்சிகளுக்கு வித்தியாதரிசி திரு. வி. தர்மசங்கரி தலைமை தாங்கி திறப்புரை நிகழ்த்துகிறார். காலைநிகழ்ச்சிகள்9 மணிக்கு ஆரம்பமாகின்றது. மாலை 5-30 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சிகளுக்கு வட பெரும்பாக வித்தியாதிகாரி திரு. எஸ. தணிகாசலம் தலைமை தாங்கி திறப்புரை நிகழ்த்துவார்.

காலையில் தியாகராஜர் பூஜையும் வித்துவான்கள் பஜனையும் நடைபெறும். மாலையில் பல வித்துவான்களின் கச்சேரிகள் நடைபெறவிருக்கிறது. கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

---

## தேனமுத இலக்கிய மன்றம்

மட்டக்களப்பு, வெள்ளி

"ஜீவனோபாயத்துக்காகச் செய்யப்படும் தொழில்கள் ஒருவரின் ஜீவனத்தை நடத்துவதற்காக வருவாயையளிக்குமே தவிர வாழ்க்கையை வளம்பெற அமைப்பதற்கு அறிவைக் கொடுப்பதில்லை. ஆகவே நாம் ஓய்வு நேரங்களை நல்ல வழியிலே செலவிட்டு நன்மயடைய முயற்சிக்க வேண்டும். அள்ள அள்ளக் குறையாத சிரஞ்சீவித்துவம் பெற்ற இலக்கியத் துறையில் ஈடுபடுவதே இளம் சமுதாயத்தினர் செய்ய வேண்டிய முக்கியபணியாகும்." மட்டக்களப்பு கமர்சியல் கல்லூரியில் நடந்த தேனமுத இலக்கிய மன்ற பொதுக்கூட்டத்தின் தலைமையுரையின் போது திரு. திமிலை மகாலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக கீழ்க்கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. என். வேலும் மயிலும், உபதலைவர்:- எம். நாகரெத்தினம், செயலாளர்:- செல்வன் ரீ. சக்திதாசன், உதவிச் செயலாளர்:- செல்வன் எஸ. செல்வராசா, பொருளாளர்:- செல்வன். கே. சக்திவரதன், உதவிப் பொருளாளர்:- செல்வி. ஜே. செல்வ ஜோகினி.

---

## பெற்றோர் ஆசிரியர் சங்கம்

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு ,கோட்டமுனை மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியா சங்கம் பங்குனி மாதம் முதலாம் திகதி நடைபெறவிருக்கிறது இக்கூட்டத்திற்கு வித்தியாலய அதிபர் திரு. கே. சிவசிதம்பரம் தலைமை தாங்குகிறார்.

---

## சுழிபுரம் கிராமசபை தலைவர் தேர்தல்

### திரு. கந்தசாமி மீண்டும் தெரிவு

யாழ்ப்பாணம், சனி

சுழிபுரம் கிராமசபையின் புதிய தலைவராக 7-ம் வட்டார அங்கத்தவரான திரு எஸ். கந்தசாமி மீண்டும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



இச்சபையின் தலைவரைத் தெரிவுசெய்வதற்கான விசேஷ கூட்டம் உதவி ஸ்தல ஸ்தாபன அதிபர் திரு. எம். சிவராசா தலைமையில் நடைபெற்றது. தலைவர் தெரிவுக்கு இன்னொருவருடைய பெயர் பிரேரிக்கப்பட்டபோதிலும் அதனைஎவரும் ஆமோதிக்காதபடியால் திரு. கந்தசாமியே மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். திரு. கந்தசாமி பொதுத்தொண்டிலும், கூட்டுறவு இயக்கங்களிலும். சமயத்துறைகளிலும் பணியாற்றிவருபவர். மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரிக் கமிட்டியின் உபதலைவராகவும் இருக்கிறார்.

பதினறு அங்கத்தவர்களில் 2-ம், 8-ம் வட்டார அங்கத்தவர்களான திருவாளர்கள் சங்கரப்பிள்ளை வீரசிங்கம், அம்பலவாணர் நன்னித்தம்பி ஆகியோர் கூட்டத்திற்கு சமுகமளிக்கவில்லை.

பின்னர் புதிய தலைவர் தலைமையில் உபதலைவர் தேர்தல் நடைபெற்றது. உபதலைவராக வேலுப்பிள்ளை முருகேசுவை தம்பிப்பிள்ளை செல்வநாயகம் பிரேரிக்க இராசநாயகம் ஆமோதித்தார்.

சின்னத்தம்பி கனகசிங்கத்தை, திரு. தம்பிநயினர் பிரேரிக்க திரு. குமாரசாமி ஆமோதித்தார். வாக்கெடுப்பில் திரு. முருகேசு பத்துவாக்குகளும் திரு கனகசிங்கம் மூன்று வாக்குக்ளும் பெற்றமையால் திரு வேலுப்பிள்ளை முருகேசு உப தலைவராகத் தெரிவுசெய்யபபட்டார். வாக்கெடுப்பில் ஆறைப்பிள்ளை கிருஷ்ணசாமி கலந்துகொள்ளவில்லை.

# அபராதம்செலுத்தத்தவறினுல் சிறைசெல்லவேண்டும்

## 'வான்' சாரதிக்கு மாஜிஸ்டிரேட் எச்சரிக்கை

மட்டக்களப்பு, வெள்ளி

"வான் சாரதிகளுக்கு எத்தகைய தவணையும் கொடுக்கமுடியாது. குற்றவாளிகளாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளவர்கள், உரிய அபராதத்தைச் செலுத்தவேண்டும். அல்லது சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்."

தனிப்பட்ட 'வான்' களில் மேலதிக பிரயாணிகளை ஏற்றிச் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட பல வழக்குகள் மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட் முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்ட போது மட்டக்களப்பு மாஜிஸ் திரு. எஸ். தம்பித்துரை மேற்கண்டவாறு கூறினர்.

வானில் மேலதிக பிரயாணிகளை ஏற்றிச் சென்றதாக, குற்றம் சாட்டித் தொடரப்பட்ட சுமார் நாற்பது வழக்குகள் கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட் முன்னிலையில் விசாரிக்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்ட வான் சாரதிகள், அபராதத்தை உடனே செலுத்த முடியாது என்றும், போதிய தவணை தரும்படியும் கேட்டனர். அபராதம் செலுத்தத் தவறியவர்களுக்கு தவணை தர முடியாதென்றும், அபராதம் செலுத்த முடியாவிட்டால் சிறைக்குச் செல்லும்படியும் மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு பொலிஸ் இலாகா போக்குவரத்துப் பகுதி சப்-இன்ஸ்பெக்டர் திரு. ஆர். டி. ஜே. ரூபசிங்க, இவ்வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தார்.

---

# இறந்த பெண் யாரென அடையாளம் காணப்படவில்லை

## மெழுகினுல் புதிய முகம் செய்ய ஸி. ஐ. டி. முயற்சி

கொழும்பு, வெள்ளி

பஹால கடுகண்ணவைப் பகுதியில் கண்டி ரோட்டில் கடந்த திங்கட்கிழமை காணப்பட்ட பெண்ணின் பிரேதம் பற்றிய மர்மம் இன்னும் துலக்கப்படவில்லை. இரண்டாவது தடவையாகக் கண்டுபிடிக்கப்பட்ட அடையாளம் பிழையானதென அறிவிக்கப்பட்டுள்ளது. சி. ஐ. டி. தொழில் நுட்ப நிபுணர்கள், இறந்த அந்தப் பெண்ணின் முகத்தை அடையாளம் கண்டுபிடிக்கும் பொருட்டு அப்பெண்ணின் முகத்தைப் போன்ற வேறு முகம் ஒன்றை மெழுகினுல் செய்ய முயற்சித்துள்ளனர். இந்த மெழுகு முகம், இறந்த பெண்ணின் சுய முகத்தைப் போன்று இருக்கும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று ராஜகிரியைச் சேர்ந்த ஒபயசேகரா நகரத்தைச் சேர்ந்த ஒருவர், இறந்த பெண் மணி தமது மகள் வயலட் நோனு எனத் தெரிவித்தார். ஆனுல் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்கள் மூலம், வயலட் நோனுவை அக்ரபத்தன என்ற இடத்தில் உயிருடன் இருக்கக் கண்டுபிடித்தனர்.

இப்பெண்ணின் அடையாளம் பற்றி அறிந்தோர், கொழும்பு டொரிங்டன் சதுக்கத்திலுள்ள சி. ஐ. டி. தொழில் நுட்பப் பகுதிக்குத் தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். இப்பெண்ணின் சடலம், இப்பொழுது கொழும்புப் பொலிஸ் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

---

# 'மக்களின் பிரச்சினைகளை பிரதிபலிப்பதே இலக்கியம்'

## வள்ளுவர் விழாவில் பேச்சு

தெல்லிப்பழை, வெள்ளி

"மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளைப் பிரதிபலித்துக் காட்டுவதே உண்மையான இலக்கியமாகும். மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளைச் சமூகமாகத் தீர்க்க வழிகாட்டுவதும் இலக்கியத்தின் பணியாகும். அன்றாட வாழ்க்கையைப் பிரதிபலித்துக்காட்டாத கற்பனை வளங்களுடைய இலக்கியங்களினுல் எதுவிதபயனுமில்லை." இவ்வாறு திரு. வ. கந்தசாமி. வீமன்காமம் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் நிகழ்ந்த திருவள்ளுவர் தின விழாவிற் பேசுகையிற் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

"குறளைப் புதுமையான கருத்தில் அணுகாவிடில் அது எப்போதோ அழிந்துபோயிருக்கும். நல்ல கருத்துக்களைக் காலத்திற்குகந்த வகையில் நாம் பயன்படுத்தி வருகின்ற தன்மையினுலேதான குறள் இன்றும் நிலைத்துநிற்கின்றது.

வள்ளுவர் வாழ்ந்தகாலத்து சூழ்நிலைக்கும் இன்றுள்ள சூழ்நிலைக்கும் வேறுபாடுகள் உளவாயினும், அன்றைய வள்ளுவர் கூறிய கருத்துக்கள் இன்றும் உண்மையாகவே உள்ளன.

இவ்விழாவிற்குத் தலைமை வகித்த பண்டிதர் திரு. இ. நமசிவாயம் தமது தலைமையுரையில் வள்ளுவர் வாய்மொழி உலகெங்கும் பரவிவருவது தமிழனின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது என்றும் குறிப்பிட்டார்

செல்வன் த. சங்கரப்பிள்ளை நன்றிகூறினர்.

---

## தற்கொலை

மக்கோனு, வெள்ளி

டியாலகொடையைச் சேர்ந்த டபிள்யு. எம். சிறில் அலெக்ஸாண்டர் (வயது 60) என்பவர் நேற்று அதிகாலை நீர்த்தேக்கமொன்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டார்.

விசாரணையின் போது இறந்தவரின் மனைவி டி. எல். மாஜி பெரேரா பின்வருமாறு தெரிவித்தார். "சம்பவம் நடைபெற்ற தினத்தன்று முதல் நாள் இரவு 11 மணிக்கு சிறில் படுக்கைக்குச் சென்ருர். நானும் சிறிது நேரம் கழித்துத்தான் நித்திரைக்குச் சென்றேன். அதிகாலை 4 மணிக்கு நான் எழுந்து பார்த்தசமயம், எனது கணவரை காணுது திகைத்தேன். விடிந்ததும் எனது கணவரின் உடல் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த நீர்த்தேக்கமொன்றில் கிடக்கக் கண்டேன் எனது கணவர் கடந்த 2 வருட காலமாக இருதய நோயினுல் மிகவும் பாதிக்கப்பட்டு வந்தார்."

மரண விசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. யு. எம். எல். சாலி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

---

## அரசாங்க பாராளுமன்ற குழு கூட்டம்

கொழும்பு, வெள்ளி

அரசாங்க பார்லிமெண்ட் குழு நேற்றுக்கூடியபோது, பால், மாவு, கருவாடு ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுவது பற்றியும், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் கஷ்டங்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

நிலைமையைச் சீராக்குமுகமாக சம்பந்தப்பட்ட அரசாங்க இலாகாக்களிடமிருந்து இது விஷயமாக அறிக்கை கோருவதென்று முடிவுசெய்யப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணிக்கு நடைபெற்ற பார்லிமெண்ட் குழுவின் கூட்டத்துக்கு சபை முதல்வர் திரு. சி. பி டி' சில்வா தலைமை வகித்தார். கூட்டத்துக்கு பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் சமுகமளித்திருந்தார்.

கிரிமினல் திருத்த மசோதா சம்பந்தமாகவும், மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கொண்டுவரும் திருத்தப்பிரேரணைகள் சம்பந்தமாகவும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

---

## முற்போக்குக் கழக சைக்கிள் போட்டி

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பின் வடபகுதி மக்களுக்காக வருடந்தோறும் சைக்கிள் ஓட்டப்போட்டிகளை நடத்திவந்த சித்தாண்டி முற்போக்கு இளைஞர்கழகத்தினர் இவ்வருடமும் தமது சைக்கிள் போட்டியை சித்திரைத் திங்களில் நடத்த முடிவுசெய்துள்ளனர்.

---

# ஆசிரியர் பதவிக்கு 7000 காலி ஸ்தானங்கள்!

## 'நிதி பற்றுக்குறையால் புதிய நியமனங்கள் இல்லை'

– உதவி மந்திரி

இரத்தினபுரி, வெள்ளி

'ஆசிரியர்கள் பதவிக்கு சுமார் 7,000 காலிஸ்தானங்கள் இருந்த போதிலும் நிதிநிலைமை காரணமாக இவ்வருடம் எவரும் நியமிக்கப்படவில்லை.' என்று பாடசாலையொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில், கல்வி அமைச்சரின் பார்லிமெண்ட் காரியதரிசி திரு. வி. டி. ஜி கருணுரத்ன கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது: "கடந்த வருடம், பாடசாலைகளில் 7,200 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். புதிய பாடசாலைகளைக் கட்டுவது அரசாங்கத்துக்கோர் பெரிய பிரச்சினையாக வந்திருக்கிறது. ஆனுல் இரு நேரப் பாடசாலைகளை வைப்பதின் மூலம் இப்பிரச்சினை தீர்ந்துவிடும். உலகின் முன்னேற்றமுள்ள நாடுகளான ரஷ்யா, இங்கிலாந்து பிரான்ஸ், அமெரிக்கா ஆகியவைகள் இந்த முறையையே கையாளுகின்றன."

---

## கல்லோயா 'றம்'

கொழும்பு, வெள்ளி

கல்லோயா 'றம்', பாவனையாளர்களுக்கு, கால் போத்தல்களிலும், 'பைண்ட்' அளவு போத்தல்களிலும் கிடைக்கும்.

---

## வாசகால வரியை மீட்க கோர்ட் நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

தற்காலிக வாசகால வரிச் சட்டத்தின் கீழ் இலங்கையரல்லாதாரிமிடந்து ரூ. 400 வாசகால வரியை மீட்கும் பொருட்டு கோர்ட் நடவடிக்கை எடுப்பதில் குடியேற்ற வெளியேற்ற கட்டுப்பாட்டதிகாரி ஈடுபட்டிருக்கிருர்.

கடந்த சில வாரங்களில், வாரம் ஒன்றுக்கு 20 முதல் 25 வழக்குகள் கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

---

## மாணவர்கள் 6 மைல் நடக்கின்றனர்

புத்தளம், வெள்ளி

மாணவர்களை ஒரு பாடசாலையிலிருந்து வேறு பாடசாலைக்கு மாற்றியதில், இங்குள்ள சுமார் 160 மாணவர்களுக்கு தினமும் ஆறு அல்லது எட்டு மைல் நடக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சிலர் சாப்பிடாமல் பாடசாலைக்குச் சென்று பிற்பகல் 3 மணிக்கு வீடு திரும்புகின்றனர்.

---

## ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நாயன் மான் கட்டு திருமகள் சனசமூக நிலைய ஆண்டுவிழாவும் இசைச் சங்க அமைப்பும் வருகிற ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாண நகரக் காரியாதிகாரி திரு. டி. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

---

## கைப்பந்தாட்ட கழகம்

முள்ளியவளை, வெள்ளி

முல்லைத்தீவுப் பட்டினசபையின் மூன்ரும் வட்டாரத்தில் சென். ஜோசப்கைப்பந்தாட்டக் கழகத்தை, அவ்வட்டாரப் பிரதிநிதி திரு. எஸ். வி. ஜோசப் அங்குரார்ப்பணம்செய்துவைத்தார்.

---

# 'சூது, பொருமையை களைவதே மனமலர்ச்சிக்கு வழி'

## வள்ளுவர் விழாவில் திரு. அம்பிகை பாகன்

மாவிட்டபுரம், வெள்ளி

"உங்கள் மனம் மலர்ச்சியடையவேண்டும். அப்பொழுதுதான் உண்மையான வாழ்வு பிறக்கும். மனம் மலர்ச்சியடைவதற்கு வள்ளுவர் வழிகாட்டியுள்ளார்." எனத் திரு. ஆர். அம்பிகைபாகன், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில், வள்ளுவர் இல்ல ஆதரவில் நடைபெற்ற வள்ளுவர் விழாவில் சொற்பொழிவாற்றுகையில் கூறினர்.

விழாவிற்குத் தலைமை வகித்த திரு. பொன்னம்பலம் வள்ளுவரதின் சிறப்பை எடுத்து விளக்கினர். காலத்தால் அழிக்கமுடியாத கருத்துக்களைக் கொண்டுள்ள திருக்குறள் எத்தனையோ மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதே அதன் சிறப்புக்குச் சான்ருகும் எனக் குறிப்பிட்டார்.

பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட திரு. அம்பிகை பாகன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

"மக்களின் மனம், குறிப்பாக மாணவரின் மனம் மலர்ச்சியடையவேண்டும். அவ்விதம் மலர்ச்சியடையவேண்டுமானுல் மாசற்ற மனத்தை நாமடையவேண்டும். மனத்தைப் பிடிக்கும் நோய்களான வஞ்சகம், சூது, பொருமை, ஆற்ருமை, புறங்கூறல் ஆதியன களையப்படவேண்டும். இக்கருத்தைப் பாரதியாரும் வற்புறுத்துகிருர். "உள்ளத்தில் ஒளியுண்டானுல், வாக்கினில் ஒளியுண்டாகும்; மாசற்ற மனத்தை மேலும் மலரச்செய்வதற்கு எண்ணுவதெல்லாம் உயர்ந்த எண்ணங்களாக இருக்கவேண்டும், என வள்ளுவர் கூறுகிருர்.

மாணவரிடையே இன்று ஒரு வெறுப்பு நிலை ஏற்பட்டிருக்கிறது. படித்து என்ன பயன்? உத்தியோகம் கிடைக்காதே என்று விரக்திமனப்பான்மையுடன் திரிகின்றனர். இவர்களைப் பார்த்து வள்ளுவர் கூறுகிருர்; 'கல்வி மேழிச்செல்வம் என்று. செல்வத்துட் தலையாய செல்வம் கல்வி. எதனுலும் அழிக்கமுடியாத செல்வம் கல்வி' என்று கூறுகிருர் வள்ளுவர்."

---

# கள்ளநோட்டுகளும், சாரதி லைசன்ஸ்களும்அச்சடித்தனர்?

## மாஜிஸ்டிரேட்முன் ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் சாட்சியம்

கம்பஹா, வெள்ளி

கொழும்பு சி. ஐ. டி. பகுதியைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் எப. எஸ். பி வெற்றசிங்கா சம்பஹா அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. எஸ். டி. ஜயசுந்தரா முன்னிலையில் வாக்குமூலமளிக்கையில், பள்ளவெல என்ற இடத்தில் தாம் ஒரு அச்சடிக்கும் சாலையைக் கண்டுபிடித்துள்ளதாகவும், அங்கு ஐம்பது ரூபாய் கள்ளநோட்டுகள், எஸ். எஸ். ஸி, ஜி. சீ. ஈ அத்தாட்சிப் பத்திரங்கள், சாரதி லைசன்ஸுகள், பிரஜா உரிமைப் பத்திரங்கள் முதலியவைகள் அச்சடிக்கப்படுவதாக நம்பப்படுவதாகவும் கூறினர்.

பள்ளவெல என்ற இடத்தில், கள்ளத்தனமாக எஸ். எஸ். ஸி. ஜி ஸி ஈ அத்தாட்சிப் பத்திரங்கள், கள்ளநோட்டுகள் முதலியவைகளை அச்சடித்ததாக ஏழுபேர் மீது குற்றம் சாட்டப்படடுத் தொடரப்பட்ட இவ்வழக்கு, கம்பஹா அடிஷனல் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம் திரு வெற்றசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மூன்று பேர் சாட்சியமளித்த பின்னர் மாஜிஸ்டிரேட் இருவரை விடுதலை செய்து மார்ச் மாதம் 2-ந் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

---

## உப தலைவர் தெரிவு

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறை பட்டினசபையின் கூட்டம் தலைவர் திரு. ஏ. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற போது திரு. எஸ். கனகசபை உபதலைவராக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

இவரின் பெயரை திரு. எம் கார்த்திகேசு பிரேரித்தார். திரு. பி. இமானுவல் ஆமோதித்தார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

சனி 24-2-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-45 வி. பரமேஸ்வரி—பாட்டு.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 எம். எஸ். மகாராஜா — பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

ஞாயிறு 25-2 62

காலை 6-45 உதய கீதம், 6·50 சைவ நற்சிந்தனை, 6–55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 தேர்ந்த இசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8–30 பக்திப் பாடல்கள், 9-00 முஸ்லிம் சமயப் பாடசாலை, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 மாதர் பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைக்குரல், 6-15 கோவில் அஞ்சல்.

இரவு 7-15 மாதர் கேட்டவை, 7-30 வி வயிரமுத்து—பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாடக அரங்கு, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள் காலை7-15, பகல் 2-00, இரவு 7-15)

சனி 24-2-62

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப் பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7–30 தின்னியம் எஸ். கிருஷ்ணமூர்த்தி — வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக் கனியமுது, 1-30 குரல் இசை, 2-10 தின்னியம் எஸ். கிருஷ்ணமூர்த்தி — வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'கதையின் அலைகள்'—நாடகம், 8-00 திரைப்பட இசை, 8-30 டெல்லி அஞ்சல், 8-40 இசைமாலை, 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி.

ஞாயிறு 25-2-62

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 பர்வதம் குஞ்சிதபாதம் — பாட்டு, 8-15 கே. ஆர். லட்சுமி—பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரிய காந்தி — கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணி மலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 டி. ஆர். கிருஷ்ணமாச்சாரி—வீணை.

மாலை 4 45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5–45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சிங்கா நல்லூர் எஸ். என் ராதா கிருஷ்ணன் —பாட்டு, 8-30பர்வதம் குஞ்சிதபாதம்—பாட்டு, 9-15 வாத்திய இசை, 9-30 டெல்லி அஞ்சல், 9-45 ஆகாசவாணி ஒலிப்பதிவுகள்.

## ப. நோ. கூ. ச. கூட்டம்

முள்ளியவளை, வெள்ளி

நெடுங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம், கூட்டுறவு உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றபோது, முன்னாள் தலைவரைப் புதிய நிர்வாக சபையில் இடம்பெறச் செய்யக்கூடாதென திரு. பொ. சிவராசா வற்புறுத்தினார். அவர், சங்க விதிகளுக்கு முரணாக நடந்துகொண்டதாகக் குற்றஞ் சாட்டியதைத்தொடர்ந்து, காரசாரமான விவாதம் நடைபெற்றது.

புதிய நிர்வாக சபையினர் விபரம் வருமாறு:-

தலைவர்: திரு. ந. இராசையா, உபதலைவர்: திரு க கணபதிப்பிள்ளை, செயலாளர்: திரு. சி. சபாபதிப்பிள்ளை.

ஒரு நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## காணி கொடுக்கப்பட்டது

ஓமந்தை, வெள்ளி

ஆசிகுளம், கல்நாட்டினகுளம், எல்லப்பர் மருதங்குளம், பெரிய கோமரசன்குளம் ஆகிய இடங்களிலுள்ள கமக்காரர்களுக்கு 21-ந் திகதி வவனியாக் கச்சேரியில் காணி அதிகாரியினால் குடிநில மேட்டுக் காணிகள் வழங்கப்பட்டன.

அவ்வப்பகுதியிலுள்ளவருக்கே காணிகள் வழங்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து பல காணிக்கச்சேரிகள் வனியா மாவட்டத்தில் நடைபெறவிருக்கின்றன.

## இரண்டாவது ரயில் விபத்து

ஹட்டன், வெள்ளி

நேற்று ஹட்டன் புகையிரத நிலையத்திலிருந்து காலை9-40க்கு புறப்பட்ட பிரயாணிகள் புகையிரதத்தின் என்ஜின் வட்டவளைக்கு அண்மையில் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. ஹட்டனிலிருந்து காலை 11 மணிக்கு புறப்படவிருந்த 'உடறட்ட மெனிக்கா' கடுகதிப் புகையிரதம் இதனால் இரண்டரை மணித்தியாலம் தாமதித்துப் புறப்பட்டது.

இதுபற்றி புகையிரத அதிகாரியொருவர் தெரிவிக்கையில் வழமையான நிலைக்கு வர சுமார் 12 மணித்தியாலங்கள் எடுக்கும் எனக் கூறினார். பிரயாணிகள் மறுபக்கங்களிலுள்ள புகையிரதங்கள் மூலம் அனுப்பிவைக்கப்பட்டனர்.

## அரசாங்கம் பொறுப்பேற்றது

வவனியா, வெள்ளி

1959-ம் ஆண்டு பிற்பகுதியில் பண்டாரிகுளம் குடியேற்றத்தில், அப்பகுதி சனசமூக நிலையத்தால் கட்டப்பட்ட பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றது. அரசாங்கத்தின் சார்பில் வவனியா வட்டார வித்தியாதரிசி திரு. எஸ். சபாபதி பொறுப்பேற்றார்.

---

இதே போல், பொருட்களும் தபாலும் அனுப்பிவைக்கப்பட்டன.

வட்டவளையில் இது இரண்டாவது புகையிரத விபத்து என்பது குறிப்பிடத்தக்கது.




## சிங்கள தேர்வு பரீட்சை

வவனியா, வெள்ளி

சென்ற வாரம் சிங்கள தேர்ச்சிப் பரீட்சை வவனியா சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இப்பரீட்சையில் நூறு பேருக்கு மேற்பட்ட தமிழ் அரசாங்க ஊழியர் பங்கு பற்றினர்.

# இலங்கை - கொரியா வர்த்தக ஒப்பந்தம்

கொழும்பு, வெள்ளி

கொரிய மக்கள் ஜனநாயக குடியரசும் இலங்கையும் இன்று வர்த்தக உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டன. இந்த ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பில் உணவு வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளையும் கொரிய குடியரசின் சார்பில் கொரியா உதவி வர்த்தக மந்திரியும் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி இலங்கையிடமிருந்து தேயிலை, ரப்பர், தெங்குப் பொருள்கள், வாசனைத் திரவியங்கள், கைப்பணிப் பொருள்கள் ஆகியவற்றை கொரிய குடியரசு இறக்குமதி செய்யும். இதற்குப் பதிலாக விவசாய யந்திரக் கருவிகள், கைப்பணிப் பொருள்கள் கருவாடு முதலியவைகளை கொரியாவிடமிருந்து இலங்கை வாங்கும்.

---

## எறிகுண்டு வழக்கு

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறைக் கடைத் தெருவில் கடந்த ஆண்டு நடைபெற்ற எறிகுண்டு வீச்சு சம்பந்தமாக ச. சர்வானந்தம், சு. நேசராசா ஆகியோர்மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணையை பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் சுப்ரீம் கோர்ட்டிற்குப் பாரப்படுத்தினர்.

---

## செங்கல் உற்பத்திக்கு செக். உதவி

கொழும்பு, வெள்ளி

பங்கதெனியா, வேயுடா, அநுராதபுரம், யட்டியான ஆகிய இடங்களில் 4 செங்கல் உற்பத்தி தொழிற்சாலைகளை அமைப்பதில் செக்கோஸ்லோவேகியா உதவி புரியும்.

---

## தண்டனைக்கு முன்பே கைதிகள் விடுதலை

### துறைமுகத்தில் வேலைசெய்த அதிர்ஷ்டம்

கொழும்பு, வெள்ளி

கொழும்புத் துறைமுகத்தில் வேலைநிறுத்தம் நடைபெற்றபோது, வேலைகள் தொடர்ந்து நடைபெற உதவிசெய்த சிறைக் கைதிகள் பலர் அவர்களது தண்டனைக் காலம் முடியு முன்பே விடுதலை செய்யப்பட்டு வருகிறார்கள். ஒரு நாள் துறைமுகத்தில் வேலை செய்தவர்களுக்கு சிறைத் தண்டனையில் 2 நாட்கள் வீதம் கழிக்கப்பட்டன. துறைமுகத்தில் திறமையாக வேலை செய்ததற்காக அவர்களுக்கு இந்தப்பரிசு கிடைத்தது.

---

## கென்னடி நிராகரித்தார்

வாஷிங்டன், பெப். 23

ஜெனிவாவில் 18 நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் கூடி ஆயுதப்பரிகரண மகாநாட்டை ஆரம்பித்து வைக்கவேண்டுமென்று மீண்டும் ரஷ்யா தெரிவித்த யோசனையை அமெரிக்கா நிராகரித்துவிட்டது. முதலில் சம்பந்தப்பட்ட நாடுகளின் வெளிநாட்டுமந்திரிகளின் மகாநாடு நடைபெறவேண்டுமென்றும், மகாநாட்டின் முன்னேற்றத்தைப் பொறுத்தே அதன் பின் அரசாங்கத் தலைவர்கள் கலந்து கொள்ளவேண்டுமென்றும் ஜனாதிபதி கென்னடியும், பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலனும் திரு. குருஷ்சேவுக்குத் தெரிவித்துள்ளனர்.

## துருக்கியில் ராணுவ கலகம்

### நசுக்கப்பட்டது

அங்காரா, பெப். 23

துருக்கியில் அரசாங்கத்தைக் கவிழ்க்க ராணுவத்தினரில் ஒரு பிரிவினர் செய்த கலகத்தை அடக்கி விட்டதாக துருக்கி அரசாங்கம் இன்று அறிவித்தது. நேற்று கலகச் சிப்பாய்களால் கைப்பற்றப்பட்ட அங்காரா வானொலி நிலையம் இன்று மீண்டும் ஒலிபரப்பத் தொடங்கியது. இன்று துருக்கிப் பிரதமர் வானொலியில் ஒரு செய்தி விடுத்தார்.

இக் கலகத்தில் 500 அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருந்தனராம். இக் கலகம் சம்பந்தமாக ஒரு ஜெனரல் உட்பட 75 அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

---

## நீதிபதிகள் சுதந்திரமாக..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார். நியமிக்கப்பட்டபின் அதில் எவ்வித தலையீடும் அனுமதிக்கப்படுவதில்லை.

சதிவிசாரணை நீதிமன்றத்துக்கான நீதியரசர்களை நீதிமந்திரி நியமிக்க வேண்டுமென்பதை கொள்கை அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஸி. ஸி. திஸ்ஸநாயக்காவின் அறிக்கை யொன்று நேற்று சபையில் வாசித்துக் காட்டப்பட்டது. அதெல்லாம் உண்மையென்று நான் சொல்லவில்லை. ஆனல் அது நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட வேண்டிய ஒரு விஷயம் என்பதி சந்தேகமில்லை. அந்த அறிக்கை உண்மையானல் குற்றச்சாட்டுக்கள் மந்திரி சபையில் மிகவும் சக்தி வாய்ந்த ஒருவருக் கெதிராகத் தொடுக்கப்பட்டதாகும். அப்படியானல் நீதிபதியை மந்திரிகள் நியமனம் செய்வது எப்படி நியாயமானதாகும்? நீதிபதிகள் சுதந்திரமாக செயலாற்ற முடியுமா?

### கோப்பாய் எம். பி. பேச்சு

கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் பேசுகையில் பின் வருமாறு குறிப்பிட்டார்.

தலைமை அதிகாரிகள் சம்பந்தப்பட்டுள்ள ஒரு சம்பவத்தை விசேஷ மன்றம் ஒன்று விசாரணை செய்வது அரசியல் திட்டத்துக்கு மாறானது. அதிகாரப்பிரிவுகள் அரசியல் திட்டத்தில் தெரிவாக குறிப்பிட்டுள்ளது. ஆனல் இவ்விஷயத்தில் வழக்குத் தொடுக்கும் (பிராசிக்கியூட்டர்) தலைமைப் பீடமே நீதிபதிகளையும் நியமிக்கிறது. இது பிராசிக்கியூட்டர் தாம் விரும்பிய படிதீர்ப்பைப் பெறுவதற்கு மறைமுகமாகச் செய்யும் ஒரு நடவடிக்கை.

அரசாங்கம் எதற்காக தங்களுடைய ஆட்களை நியமிக்க விரும்புகிறது? தீர்ப்பு தங்கள் பக்கமாகவே இருக்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்புவதனலேயே இவ்விதம் செய்ய விரும்புகிறது. இது இயற்கைச் சட்டத்துக்கே முரணானது. இது ஒரு மனிதன் தனது வழக்கில் தன்னைத்தானே நீதிபதியாக நியமித்துக் கொள்வது போன்றிருக்கிறது.

---

## துப்பாக்கியால் சுடப்பட்டாராம்

முள்ளியவளை, வெள்ளி

முகத்தான் குளம் குடியேற்றத்திட்டத்தைச் சேர்ந்த அ. தம்பிராஜா என்பவர், கால்களில் துப்பாக்கிக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுட்டவரெனச் சந்தேகிக்கப்படும் பொன்னன் என்பவரைப் பொலிஸார் தேடுவதாகத் தெரிகிறது.

## சுட்டுக்கொல்ல....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வியாகவும் நீதிபதியாகவும் இருக்கப்போகிறார் உண்மையில் மந்திரி புகார் செய்தவருமாவார். "சதித்திட்டம் நிறைவேறியிருந்தால் எங்களுக்கு என்ன நிகழ்ந்திருக்கும்?" என்று அரசாங்கம் கூறுகிறது. தனது சொந்த வழக்கில் அரசாங்கமே முறைப்பாடு செய்தவராகவும் வழக்கை நடத்துபவராகவும் (பிராசிகியூட்டர்) நீதிபதியாகவும் இருக்கவே அரசாங்கம் முயற்சி செய்கிறது.

விசாரணை நடைபெறவிருக்கும் 'சட்டவிரோத நீதிமன்றம்', 'சட்டத்துக்கு மாறான நீதிமன்றம்' நீதியையே அழிப்பதாகும்.

சதியில் சம்பந்தப்பட்டதாக கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டுள்ள 29 பேர்களையும் சட்டுக் கொல்லவேண்டுமென்று கோரும் 'தண்டனை மசோதா' வொன்றை அரசாங்கம் கொண்டுவந்திருந்தால் நான் அதை ஆதரித்து வாக்களிப்பேன். ஆனல், நீதியையே குலைக்கும் ஒரு முயற்சியை நான் ஒருபோதும் ஆதரிக்க மாட்டேன்.

### சுதந்திரம் அழிக்கப்பட்டால்

சுதந்திரம் அழிக்கப்பட்டால் புரட்சிச் சதிகள் உண்டாகும்; கொலைகளும் நிகழும். சதி விசாரணை நடைபெறவிருக்கும் 'சட்டவிரோதமான மன்றம்' நீதியையே அழிப்பதாகும்.

---

## கலைப்புலவர் மறைவுக்கு நாவலர் பாடசாலையில் அனுதாபக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

கலைப்புலவர் க. நவரத்தினம் மறைவு குறித்து வண்ணை நாவலர் பாடசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் ஓர் அனுதாபக்கூட்டம் நேற்று நடாத்தப்பட்டது.

அக் கூட்டத்துக்கு தலைமையாசிரியர் பண்டிதர் இ. திருநாவுக்கரசு தலைமை வகித்துப் பேசுகையில் தமிழ்க் கலை, கலாச்சார வளர்ச்சிக்கு அவர் செய்த சேவை போற்றற்குரியது என்றும் விடாமுயற்சியினலே அரிய சாதனைகளைச் செய்துள்ள பெரியார் என்றும், மறைந்தாலும் அவர் செய்த சேவை எம்மைவிட்டு அகலாது என்றும் குறிப்பிட்டார்.

ஆசிரியர் சோ. அமிர்தலிங்கம் பேசுகையில், வர்த்தகக் கலை வளர்ச்சிக்காக அவர் செய்துள்ள சேவை எம்மால் என்றும் மறந்துவிட முடியாது என்று கூறினர்.

ஆசிரியர் சி. சீவரத்தினம் பேசியதாவது:-

தமிழ்க்கலையை மறுமலர்ச்சியடையச் செய்வதில் எந்நேரமும் முன்னின்றுழைப்பவர். கலை வளர்ச்சி பற்றி எழுதிய நூல்களினல் நமது கலையின் மேன்மையை உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளார். யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட தமிழ் விழா ஒன்றே அவரது பெருமையை உணர்த்தக்கூடியதாயிருக்கின்றது. அவர் மறைவு யாழ்ப்பாணத்துக்கு மாத்திரமல்ல தமிழ்நாடு முழுவதற்குமே ஒரு பெரிய நஷ்டமாகும்.

செல்வன் சி. கந்தவேலுவும் பேசினர். அவரது ஆன்மா சாந்தியடையும் வண்ணம் 2 நிமிட நேரம் மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

---

## உணவுமந்திரிக்கு கொரியா அழைப்பு

உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தினவை கொரிய மக்கள் ஜனநாயக குடியரசுக்கு விஜயம் செய்யுமாறு இப்பொழுது இலங்கை வந்துள்ள கொரிய வர்த்தக தூதுகோஷ்டி இன்று அழைப்பு விடுத்தது. அழைப்பை ஏற்றுக் கொண்டு சந்தர்ப்பம் கிடைத்ததும் கொரியாவுக்கு விஜயம் செய்வதாக அமைச்சர் பதிலளித்தார்.

# ஆங்கில போதனைபற்றி விடுமுறை கழகம்

## வவனியாவில் ஆரம்பம்

வவனியா, வெள்ளி

வவனியா சிங்கள மகா வித்தியாலய மண்டபத்தில் ஆங்கிலம் இரண்டாவது மொழியாகப் படிப்பித்தல் சம்பந்தமாக ஓர் விடுமுறை கழகம் இன்று நடைபெற்றது. இவ்வகுப்பில் பிரதான பேச்சாளராக ஐ. நா. கல்வி விஞ்ஞானக் கழக ஆலோசகர் திரு. சி. அலன் கலந்து கொண்டார். இவ்வகுப்பில் மன்னர், முருங்கன், வவுனியா, முல்லைத்தீவு, புளியங்குள வட்டார ஆங்கில ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். வவனியா கல்வி அதிகாரி திருமதி ஆர். நவரத்தினம் தலைமை வகித்துப் பேசுகையில் ஆங்கிலத்தை ஆசிரியர்கள் கற்றல் மட்டும் போதாது கற்ற விடயங்களை மாணவர்களுக்கு கற்பிக்கத் தெரிய வேண்டுமென்றும், பிள்ளைகளை ஆசிரியர் முதலில் அறிந்து அதற்கேற்ப கற்பிக்க வேண்டுமென்றும், கற்பிக்கும் விடயங்கள் மாணவருக்கு உபயோகமாக இருக்க வேண்டுமென்றும் கூறினர்.

மன்னர் வித்தியாதரிசி திரு எஸ். நவரத்தினம் காட்சிப் பொறிகள் மூலம் படிப்பிக்கும் விஷயத்தை விளக்கினர். ஆர். எல். குணவர்த்தன பாடத் திட்டம் போடும் முறையை விளக்கினர்.


சினிமாஸ் ஸ்தாபனத்தாரின் மகத்தான வெளியீடு!!

பிளாஸா (வெள்ளவத்தை) — கெபிட்டல் (கொழும்பு)
வெம்பிளி (கண்டி) — விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை) — சகாரா (சிலாபம்)

மனேகர், வீரப்பா, ஈ. வி. சரோஜா, ஸ்ரீ ராஜசுலோசன நடித்த




2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 10 தியேட்டர்களில்

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாசமலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்) — நாகையா பத்மினி

நடித்த

ஏழைபடும்பாடு


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962 ஆண்டு பெப்ரவரி மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.